ஆசிரியர்
வார இதழ் மு. கருணாநிதி
முரசு 3 | 28-9-56 வெள்ளி | ஒலி 25



மாற்றுந்தாய் சொந்தத் தாயாக மாறினாலும்....

குவிந்திருக்கும் அதிகாரம் குறைந்தாலும்....

மத்திய அரசு நமக்குத் தூசு!

வினா : "வட நாட்டில் ஒன்றிரண்டு மாகாணங்களில் ஏதாவது சுறுசுறுப்பாக முன்னேற்ற வேலைகள் நடக்குமானால் அது மாகாண மந்திரி சபையின் திறமையையும் செல்வாக்கையும் பொறுத்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் அங்குள்ள நீர்வளத்தைப் பொறுத்ததாகவும் இருக்கலாம். நமது மாகாண சர்க்காரும் திறமை உள்ளதாகவும் செல்வாக்குள்ளதாகவும் இருக்குமானால் நல்ல திட்டங்களைப் போட்டு பல முன்னேற்றத்துக்கான வேலைகள் செய்யலாம். அதை விடுத்து மத்திய சர்க்கார் மாற்றுந்தாய் போல் நடந்து கொள்ளுகிறது. ஆகவே, 'திராவிடஸ்தான்' என்று கோருவது 'கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும், கிழவியைத் தூக்கி மணையில் வை' என்பது போலாகும்';......

❊

"டில்லியில் மத்திய சர்க்கார் இருக்கிறது. மாகாணங்கள் எதற்கெடுத்தாலும் டில்லியின் உத்தரவை நாடுகிறது. இது உண்மைதான். அதற்குப் பரிகாரம் திராவிடஸ்தான் அல்ல. மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்களைக் குறைத்து ராஜ்ய சர்க்காருக்கு மாற்ற வேண்டும். அதற்குக் கிளர்ச்சி செய்தால் மக்கள் ஆதரவு நிச்சயம் கிடைக்கும்."

—இதைவிட்டு தனி திராவிடஸ்தான் கேட்பதால் பலன் என்ன இருக்கிறது?

இந்தக் கேள்வியில் இரு யூகங்கள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன.

(1) முதலாவதாக, மத்திய சர்க்கார் மாற்றுந்தாய் போல் நடந்து கொள்வதால் தான் நாம் திராவிடநாடு கேட்கிறோம் என்பது.

(2) அடுத்தது, மத்திய சர்க்காரில் குவிந்திருக்கும் அதிகாரங்களைக் குறைத்து, அவைகளை ராஜ்ய அரசாங்கங்களுக்கு மாற்றி விட்டால் நாம் திராவிடநாடு கேட்பதற்குப் பரிகாரம் கிடைத்து விடும் என்பது.

இவை இரண்டுமே ஆதாரமற்ற யூகங்கள்.

மத்திய அரசாங்கம் மாற்றுந் தாய்போல் நடந்து கொள்ளாமல், சொந்தத் தாய் போலவே செல்லம் கொடுத்து, நம் சிந்தை அணு ஒவ்வொன்றையும் மகிழ்விக்கும் வகையில் நடந்து கொண்டாலும்கூட நாம் திராவிடநாட்டுக் கோரிக்கையை விட்டுவிட மாட்டோம்.

அதுபோலவே; மத்திய அரசானது தன்னிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்களில் பலவற்றை சென்னை—ஆந்திர—மைசூர்—திரு. கொச்சி ரரஜ்யங்களுக்குக் கொடுத்துவிட்டால்கூட திராவிட நாட்டுப் பிரிவினை இலட்சியம் செத்து விடாது.

நாம் ஏன் திராவிட நாடு கேட்கிறோம்?

மத்திய அரசு மாற்றுந்தாய் வேஷம் போடுகிறது—என்கிற ஒரே காரணத்தினலா? அல்ல; அல்ல!

பின்னர்; மத்திய அரசு ஒரு சர்வாதிகார அரசுக்குரிய அதிகாரங்களை வைத்துக்கொண்டிருக்கிறது—என்ற ஒரே ஒரு அடிப்படையிலா? அதுவும் இல்லை.

நாம் தனிநாடு கேட்பதற்காகக் குறிப்பிடுகிற பல காரணங்களில் இவை இரண்டும் இடம் பெற்றிருக்கின்றனவே தவிர; இந்த இரண்டையும் போராடிப் பெறுவதற்கு மட்டுமே நாம் திராவிட நாடு கேட்பதாக நினைத்துக் கொண்டிருப்பார்களேயானால் அவர்கள் நம் பிரச்னையைப் புரிந்துகொள்ள முடியாத—அல்லது புரிந்து கொண்டு புரியாதவர்கள்போல் நடிக்கின்ற போலிவேஷதாரிகளாகவே இருக்கவேண்டும்.

உதாரணமாக நாளையே நேரு அரசாங்கம் முன்வந்து, தென்னகத்திற்கு, ஐந்தாண்டுத் திட்டத்திற்குச் செலவிடப்படும் தொகையில் பாதியைக் கொடுத்துவிடுவதாக வைத்துக்கொள்வோம்.

அதைப்போல தனது அதிகாரங்களில் பெரும்பாலானவற்றையும் துறந்து விடுவதாகவும் நினைத்துக்கொள்வோம்.

—இந்த இரு காரியங்களும் செவ்வனே நடைபெற்று விட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கப்பட்டுவிடுமா?

மத்திய அரசாங்கம்தான் தனது சுயரூபத்தை மாற்றிக் கொண்டதே—என்று நினைத்து தி. மு. க. வில் பணியாற்றிக் கொண்டிருக்கும் லட்சத்துக்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் அனைவரும் திசைமாறிப் போய் விடுவார்களா?

நிச்சயம் கழகமும் கலைக்கப் படமாட்டது; அதன் அங்கத்தினர்களும் இலட்சியம் ஈடேறி விட்டதாகக் கருதி ஓய்வெடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

ஏன் அப்படி?

வடக்கு வாழ்கிறது; தெற்கு தாழ்கிறது என்ற நிலைமை போய்விட்டது; அதிகாரம் அங்கே—என்று சுட்டிக்காட்டியதும் சூன்யமாகிவிட்டது—அதற்குப் பிறகும் தனித் திராநாடு கேட்கப்படுவானேன்?

—இப்படி ஒரு கேள்வியை உருவாக்கிக்கொண்டு அதில் பதில் தேடிப் பொருத்திப் பார்த்திடத் தவறிவிட்டார், திராவிடஸ்தான் வேண்டாமென்று தீர்ப்புக் கூறவந்த 'பஞ்சாயத்தார்!'

அழகான மனைவி. அவளோ வெல்லச்சொல் வார்த்தையாடி கள்ளக் காதலனுடன் லயித்துக் கிடக்கிருள். இதைப் பார்த்து விட்டான், அந்தக் கற்கண்டுக் கட்டியைத் தொட்டுத் தாலிகட்டிய மணவாளன்! உடனே, ஏதும்பேசாது, துடிக்கின்ற மீசைதனை சிரமத்துடன் அடக்கிக் கொண்டு, மாமியாரிடம் சென்று, "நான் வீட்டுக்குள் நுழைந்த நேரத்தில் உன் மகள்—என் மனைவி, வேறொரு புருஷனோடு; என்னிடம் எப்போதும் கொஞ்சி மகிழ்ந்திடாத அளவுக்கு பஞ்சணை ராணியாக விளங்குகிருள். அதற்கு நீ என்ன பதில் சொல்கிருய்?" என்று கேட்டானும்.

மமதை கொண்ட அந்த மாமியாரோ சிறிதும் திடுக்கிடாமல், "என் மதிப்பிற்குரிய மாப்பிள்ளை அவர்களே! நீவிர் சொன்ன வார்த்தைகளில் இரு

❊ தொடர்ச்சி 8-ம் பக்கம்

கே. வி. கே. சாமி பிரிவு

●

செப்டம்பர் 30: அனுதாப நாள்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், பல்வேறு தொழிற் சங்கங்களின் தலைவரும், தூத்துக்குடி நகராண்மைக் கழக உறுப்பினருமான தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு, நம்மை விட்டுப் பிரிந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கவும், நமது இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளவும், செப். 30 ஞாயிறன்று நாடெங்கும் அனுதாபக் கூட்டங்களை நடத்துமாறு திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளை வேண்டிக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13. 24-9-56.

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

சென்னை 28--9--56 வெள்ளி

உறுதி மொழி!

வரும் 30-ம் நாள் நாடெங்கும் மறைந்த மாவீரனுக்கு வீரவணக்கம் செலுத்துகிற இரங்கற் கூட்டங்களை நடத்துவதற்குத் தி. மு. கழகத்தின் கிளைக் கழகச் செயல் வீரர்கள் விழியில் வழியும் நீரையும் தடுத்திட வகையின்றி ஈடுபட்டுள்ளனர். சாமிச்சென தி. மு. கழகம் நடத்த இருந்த நல்ல பெரும் விழாக்கள் எத்தனையோ இருந்தன. அத்தனையும் நிறைவேருத வெறுங் கனவுகளாகிவிட்டன.

பொதுத் தேர்தலிலே வெற்றிமாலை சூடுவான் எங்கள் வீரன்—என்று நெல்லைச் சீமையே தோள்தட்டிக் கூறிற்று.

அந்த வெற்றி விழாவை எப்படி நடத்துகிருேம் பாருங்கள் என்று தூத்துக்குடி பெருமையுடன் முழங்கிற்று. அவ் விழாவுக்குத் தலைவனு யிருக்கவேண்டிய சாமியை விஷ நெஞ்சினர் மாய்த்துத் தீர்த்துக் கட்டி விட்டனர்.

எப்போது சாமி திருமணம் ?—என்று கேலியோடு நான் கேட்க, "இரண்டோரு மாதங்களில் நடத்திக் கோள்ளலாம் என்று இருந்தேன்—அதற்குள்தான் தேர்தல் வேலைகள் எல்லாம் நிறைய வருகிறதே அண்ணுச்சி ; அதனுல் அடுத்த ஆண்டுதான் !" என்று அவர் கூற—"தங்கள் திருமணவிழா ஒரு மாநாடு போலவே நடக்கும்—அண்ணு முதல் எல்லாத் தலைவர்களும் வருவர்" ஏன்று நான் சோல்ல—அவர் மகிழ, நான் அதை ரசிக்க—இப்படியோரு உரையாடல் கடந்த ஒன்ப தாம் நாளன்று சென்னை அறிவகத்திலே நடைபெற்றது, எனக்கும் அவருக்கும் ! அடுத்த ஆண்டு மண விழாத் தலைவனுக வீற்றிருப்பார், வாழ்வுக்குத் துணைபெற்று-என்று எண்ணியிருந்த அனைவரையும் சோக எரிமலையில் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டார் போர் முகத்தில் புறங்காணுக் காளை !

போதுச் செயலாளர் குறிப்பிட்டதுபோல போருமைக்காரர்கள்—கருத்து வேறுபாடுகளை விவாதித்துத் தீர்த்துக் கோள்ளும் வகையறியாத வஞ்சகர்கள்—சாமியின் உயிரைக் குடித்து வெறி தீர்த்துக் கோண்டார்கள்.

அரசியலில் நாகரிகம்—பண்பாடு—அறவோழுக்கம்-அன்புடைமை ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற தூய நோக்கு படைத்த தி. மு. கழகத்தினர், இப்படியோரு படுகோலைச் செய்தி கேட்டு பதைத்துத் துடிப்பதிலே வியப்பில்லை. அதுவும் பாசமும் நேசமும் பணிவும் பண்பும் கோண்ட பாசறைத் தளபதியோருவரின் உயிர் கோத்தப்பட்டு விட்டது; உள்ளமோன்றில்லாத உன்மத்தர்களால் என்கிறபோது அணை உடைத்துப் பெருகும் வெள்ளமென உருவெடுக்கிறது கண்ணீர்!

" சில நாட்களாக மிக மிக உற்சாகத்தோடும் களிப்போடும் இருந்தேன். அதையெல்லாம் சிதற அடித்து விட்டது இந்தச் சேதி "யேன்று நமது மூத்த அண்ணு விழிகளைக் குளமாக்கியவாறு கூறியபோது—அய்யோ ; என்ன பாடுபட்டது தெரியுமா நெஞ்சம் ! அரசியலில் இது போன்ற அநாகரிகச் செயல்களுக்கு இனிமேலாவது இடமில்லாமற் போகாதா ?—என எண்ணி ஏங்குகிறது நாடு !

சாமி ஏன் கோல்லப்பட்டார் ? கோள்கைக்காக வாழ்ந்தார், கோள்கையோடு சேர்ந்து வளர்ந்தார், உழைத்தார், உயர்ந்தார். தூத்துக்குடி என்ருல் சாமி என்று கூறத்தகும் அளவுக்கு வளர்ந்தார். அவரது வளர்ச்சியே அவருக்குப் பகையாக எதிர் நின்றது. உச்சி மோந்து, சன்னம் வருடி, உத்தமனே ! உழைக்கும் தோழனே ! உன் கோள்கைகள் பரவட்டும் ! என்று பாராட்டப்பட வேண்டிய பண்பாளன் படுகோலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிருன். மன்னிக்கப்பட முடியாத நெஞ்சழுத்தக்காரர்கள் — இதயமற்ற இழி பிறவிகள்—அந்த வீரனை வீழ்த்துவதிலேதான் நம் வாழ்வு இருக்கிறது என்று சணக்கிட்டுக் கோண்ட கயவர்கள்-ரத்தங் குடிக்கும் ஓநாய்களாக மாறியிருக்கிருர்கள்.

இத்திங்கள் ஒன்பதாம் நாள் சென்னை வந்தார். தேர்தல் நிலை குறித்து விவாதித்தார். தி. மு. கழகத்தின்மீது காரணமின்றிக் காய்ந்து விழும் கருத்துக் குருடர்களைப் பற்றி யெல்லாம் பேசினுர். தேர்தலில் எந்தெந்தக் கட்சியினர் இழி போக்கைக் கடைப்பிடிப்பர் என்பது பற்றி ஆய்வுரைகள் ஆற்றினுர்.

தூத்துக்குடி சென்றதும், 16-ம் நாள் தி. மு. கழகப் போதுக் கூட்டம் நடத்தினுர். அதிலும் கழகக் கோள்கைகள் பற்றி விரிவுரையாற்றினுர். ஒரு வாரத்தில் மற்றேரு பெரிய கழகக் கூட்டம் நடத்தத் திட்டமிட்டு ஏற்பாடுகளைக் கவனித்தார். அதற்குள் சாய்க்கப்பட்டு விட்டார்.

—இப்படி என்றும் கோள்கைக்காகவே பேசிச் செயலாற்றிய ஒரு வீரனை இழந்து நாம் தவிக்கிருேம்.

அந்த மாவீரனுக்கு நாம் காட்டும் மரியாதை அவன் வழி நின்று அவன் கட்டிக் காத்த கோள்கைகளை வளர்ப்பதுதான் !

இதைத்தான் வரும் 30-ம் நாள் நாம் உறுதி மொழியாக எடுத்துக் கோள்ள வேண்டியவர்களாயிருக்கிருேம்.

வாழ்க சாமியின் புகழ் !

—மு. கருணுநிதி.

அக்டோபர் 7-ம் தேதி கிடைக்கும்!

சத்தான கருத்துடன்; நொத்தான மலர்போல் திகழும்

முத்தாரம்

★ கே. மாதவன் தீட்டியிருக்கும் வனப்புகோள் முகப்பு !

★ நல்லறிஞர் தரும் வெல்லச் சோல் கட்டுரைகள் !

—இவையனைத்தும் கோண்ட ஆணிப் போன் சரங்கம் !

முத்தாரம்

★ கருணுநிதி தரும் கவின்மிகு 'கவிதைச் சிறுகதை !'

★ மற்றும், காவியம் ஓவியம் கோண்ட கற்கண்டுக் கட்டி !

முத்தாரம்

★ 'பிரேத மனிதன்' இந்த இதழில் பிராங்கேன்ஸ்டீனுக்குப் புதிய பிரச்சினையாக உருவெடுக்கிருன் !

★ தவிரவும் ரஷ்ய இலக்கியத்தின் இளம் பரிதியாய் விளங்கும் லியோ டால்ஸ்டாய் தீட்டிய 'புத்துயிர்' தீங்கனிக் காவியமாகச் சுருக்கப்பட்டிருக்கிறது.

இத்தனை பகுதிகளையும் சுவைக்க இன்றே உங்கள் இதழுக்கு விற்பனையாளரிடம் சோல்லி வையுங்கள்!

இது கூண்டு; அது 'கூடு'!

❀ 10-ம் பக்கத் தொடர்ச்சி

போலந்து மக்கள் எல்லாம் பிரஷ்யர்களாக்கப் பட்டால் போலந்து நாட்டின் சங்கீதம், கலை—இவை என்னாவது?'

—வங்காளப் பல்கலைக் கழகத்திலே பேராசிரியராக இருந்த கில்கிரிஸ்ட் கேட்கிறார். இப்படி போலந்து மக்கள் பிரஷ்யர்களாக மாற்றப்பட்டு விட்டால் உலகப் பெருமை பெற்ற அவர்கள் சங்கீதமும், கலையும் என்ன ஆவது என்று? அதையேதான் நாமும் திருப்பிக் கேட்கிறோம்.

தென்னகத்தின் பூர்வ குடிகளாகிய ஏழுகோடி திராவிடர்களும் இந்தியர்களாக்கப் பட்டால் உலகத் தொன்மை பெற்ற எங்கள் மொழியும், கலையும், கலாச்சாரமும் என்ன ஆவது?

நிச்சயமாக அழிந்து விடும் நம் மொழியும், கலையும், கலாச்சாரமும்! திராவிடர்களை இந்தியர்களாக்கும் முதல் முயற்சிதான் இந்தித் திணிப்பு. அந்த அன்னியமொழிப் பிரவேசத்தால் முதலில் திராவிட மொழிக் கிணறுகள் அத்தனையும் தூர்ந்துபோகும். பிறகு நாளை 'தேசிய உடை' என ஒன்றைப் புகுத்தி எல்லோரும் தங்களை இந்தியன் என்று காட்டிக் கொள்ள வடநாட்டு பாணியில்—குறிப்பாக நேருபாணியில் தான் உடை அணிந்துகொள்ள வேண்டுமென்று சட்டம் செய்வார்கள். இதுபோன்ற செயல்களால் நாளடைவில் நம்முடைய பழக்க வழக்கங்கள் யாவும் பள்ளம் தோண்டிப் புதைக்கப்படும். பிறகு தலை முறை தலை முறையாக—யுக யுகாந்திரமாக நாம் கட்டிக்காத்து வந்த திராவிட தேசிய இனம் என்பது கட்டாயம் க்ஷீணித்துவிடும்.

இந்த அழிவு வெள்ளத்தை அணைபோட்டுத் தடுக்க வேண்டாமா? பூக்காட்டிலே படையெடுத்து வரும் கள்ளிக்காடு தனை பூக்காமல், காய்க்காமல் வேரோடு வெட்டிச் சாய்க்க வேண்டாமா? அதற்காகத் தான் வீடு, வாசல், மாடு, மனை, உடல், பொருள், ஆவி, இவை அத்தனையும் துறந்துவிடத் தயாராகி திராவிடநாடு திராவிடருக்கே—என்று முழக்கமிடுகிறோம்! அதனால்தான் திராவிடம் பிரிந்தால்தான் நமது இனத்துக்கு வாழ்வு என்பதை தில்லுமல்லுக் காரர்களுக்கு—மர மண்டைகளுக்கு எப்பாடு பட்டாவது உணர்த்திட முன் வந்திருக்கிறோம்! அதனால்தான் இப்போதிருக்கிற வடநாட்டு மத்திய அரசு மலரணையை மஞ்சமாக்கி அதில் நம்மை மகிழ்ந்திருக்கச் சொன்னாலும், அந்த மத்திய அரசு நமக்குத் தூசு—எனத் துந்துபி முழக்குகிறோம்!

மத்திய அரசு எப்படிப் பட்டது என்பதை சர். ஏர்னஸ்ட் பார்க்கர் என்னும் அரசியல் மேதை விளக்குவதைப் பாருங்கள்:

"பல தேசிய இனங்களை உள்ளடக்கிய ஒரு நாட்டில் அரசாங்கமானது உள்ளே யிருக்கிற பல தேசிய இனங்களை ஒன்றோடொன்று மோதவிட்டு தன்னுடைய எதேச்சாதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்கிறது என்பதும், அல்லது; ஒரு தேசிய இனத்தின் கைப் பாவையாக மாறி இதர தேசிய இனங்களை அடக்கவோ அல்லது அழிக்கவோ முயலுகிறது—என்பதும் 1860-ம் வருஷத்திலிருந்தே வெளிப்படை."

பார்க்கர் கூறிய இந்தக் கருத்துரையில் இரு உண்மைகள் அடங்கியிருக்கின்றன.

(1) பல தேசிய இனங்களைக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம் தன் ஆதிக்கத்தின் கீழேயிருக்கிற தேசிய இனங்களை யெல்லாம் ஆடுகளைப் போல் ஒன்றோடொன்று மோத விட்டு, நரியாக மாறி, எதேச்சாதிகாரம் என்னும் இரத்தத்தைக் குடிக்க ஆரம்பிக்கிறது.

(2) அல்லது, பலம் வாய்ந்த ஏதாவதொரு தேசிய இனத்தின் கைப்பாவையாக மாறி இதர தேசிய இனங்களை நசுக்க முயற்சிக்கிறது.

இவைகளைப் பொருத்திப் பார்த்தால் இந்த இரு செயலையும் நேருவின் தலைமையிலே இயங்கிவரும் வட நாட்டுப் பேரரசு செய்து வருவதை உணரலாம்.

(1) முதலாவதாக: தமிழர்களுக்குச் சொந்தமான தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகளை மலையாள மாநிலத்துக்குக் கொடுத்து; திராவிடக்குடும்பத்தினரிடையே எப்பாடு பட்டாவது மனக் கசப்பை உற்பத்தி செய்ய முயன்று, அதன் மூலம் தனது அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டு வருகிறது பண்டிதரின் அரசாங்கம்!

(2) பார்க்கர் கூறியிருப்பதைப் போலவே வடநாட்டுப் பேரரசானது இந்தி மொழிக்காரர்களின் கைப்பாவையாகி திராவிட தேசிய இனத்தை அரசியல்; பொருளாதாரக்; கலைத் துறைகளில் ஒடுக்கவும் ஒழிக்கவும் முயற்சித்து வருகிறது.

நினைவிருக்கட்டும், இந்த இரு கொடிய தன்மைகளும் பல தேசிய இனங்களைக் கொண்டிருக்கிற அரசாங்கத்திற்கு மட்டுமே சொந்தமானவை!

இதைப் புரிந்து கொள்ளாமல் திராவிடஸ்தான் வேண்டாமென்கிற பஞ்சாயத்தார் வேறொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்:

திராவிடஸ்தானிலும் மத்திய சர்க்கார் என்று ஒன்று இருக்குமல்லவா? நாலு பாஷைக்காரர்களில் எவர் பிரதம மந்திரியாக வந்தாலும் மற்ற மூவரும் முணுமுணுக்க மாட்டார்களா? அப்போதும் 'மத்திய சர்க்கார் ஆதிக்கம்' இருக்கத்தானே செய்யும்?

அதாவது நாம் கேட்கும் திராவிட நாட்டிற்கு அமையப் போவதோ ஒருவித கூட்டாட்சி; ஆக கூட்டாட்சி என இருந்தால் மத்திய அரசாங்கம் நிச்சயம் இருந்தாக வேண்டும். அப்படியானால் அந்த மத்திய சர்க்காரின் ஆட்சியின் போது—

(1) மற்ற மொழிக்காரர்களின் முணுமுணுப்பு.

(2) இதரமொழிப் பிராந்தியங்களின் மீது ஆதிக்கம்.

—இவை இரண்டும் இருக்கத்தானே செய்யும்?

இப்படிக் கேட்கிறார் அவர்! ஆனால் உண்மை அப்படி அல்ல!

(1) திராவிட நாட்டுக் கூட்டாட்சிக்கு ஒரு தமிழன் பிரதம மந்திரியாக வந்து விட்டால் ஆந்திரரோ, மலையாளிகளோ, கன்னடக்காரர்களோ தங்கள் பிரதிநிதிகள் அந்தப் பதவிக்கு வரமுடியவில்லையே—என்று வேதனைப் படமாட்டார்களா? — இது தான் கேள்வியின் முதற்பகுதி!

தமிழரில் ஒருவர் பிரதமராக வந்தால் ஆந்திரருக்கோ, அல்லது மலையாளிக்கோ சிறிது மன வருத்தம்—அல்லது சபலம் ஏற்படக்கூடும்.

அதைத் தவிர்க்க நாம் வேறொரு மார்க்கத்தைக் கடைபிடிக்கலாம்.

உதாரணமாக ஸ்விட்சர்லாந்து நாட்டில், பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஆண்டுக்கொரு முறை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அதைப் போலவே நாமும் கடைப்பிடிக்கலாம்.

நாளை மலரப் போகும் சுதந்தர திராவிடக் கூட்டாட்சியிலும் ஒரு ஜனாதிபதி இருப்பாரல்லவா?

அவரைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆண்டுக்கொரு முறை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நாம் ஒரு நியதியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

அப்படி ஒரு பழக்கம் ஏற்படும்போது ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மொழிக்காரரே ஜனாதிபதியாய் வர வேண்டுமென்றும் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

எப்படியெனில்; இந்த ஆண்டு ஒரு தமிழர், திராவிடக் கூட்டாட்சியின் ஜனாதிபதியாக! அடுத்த ஆண்டு ஒரு ஆந்திரர் அந்தப் பதவிக்கு வருவார்; அதற்கு அடுத்த ஆண்டு ஒரு மலையாளி; பிறகு ஒரு கன்னடக்காரர்—இப்படி நமக்குள்ளாகவே ஒரு சுமுகமான ஏற்பாட்டைச் செய்து கொண்டால் நமது எதிரிகள் நினைக்கிறபடி அந்த 'முணு முணுப்பு' எழுவதற்கே இடமில்லாமற் போய்விடும்.

(2) அடுத்து நாளை ஏற்படப் போகும் மத்திய அரசாங்கமும் இப்போதிருப்பதைப் போலவே ஆதிக்கம் செலுத்துவதாகத்தானே இருக்குமென்று அங்கலாய்க்கிறார் பஞ்சாயத்தார்.

இப்போதுதான் ஏர்னஸ்ட் பார்க்கர் கூறிய வாசகங்களை மீண்டும் நினைவு படுத்திக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அரசாங்கம் எதேச்சாதிகாரம் கொண்டதாக; குடுமி முடிந்து விடுவதாக மாறும்—எப்போது?

ஒரே ஆட்சிக்கு பல தேசிய இனங்களை கட்டிக் காக்கின்ற பேராசை பிடிக்கும் போது!

ஆனால் நாம் கேட்கும் திராவிட நாட்டிலே பல தேசிய இனங்கள் இருக்காது. ஒரே ஒரு தேசிய இனம்; திராவிட தேசிய இனம்தான் இருக்கும்! ஆகவே அங்கே ஆதிக்க உணர்ச்சி தோன்றுவதற்கு இடமே கிடையாது.

இன்னும் சொல்லப்போனால் இப்போது இருக்கும் வடநாட்டு மத்திய அரசு என்பது நமக்கு ஒரு சிறையைப் போல! தங்கத்தாலே கூரை வேய்ந்து, அதற்கு வைரமிழைத்த கம்பிகளைப் போட்டிருந்தாலும் பஞ்ச வர்ணக் கிளி சிறகடித்துப் பறப்பதற்குத்தான் முயற்சி செய்யும்!

ஆனால் நாளை திராவிடத்தில் தோன்ற இருக்கும் மத்திய அரசோ நம்மைச் சிறைப் பிடித்துவைத்திருக்கும் கூண்டு அல்ல; நாமே நமது பாதுகாப்புக்காக செப்பனிட்டு அமைத்துக்கொள்ளும் கூடு!

கூண்டு—

கூடு—

—இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம்தான் வடநாட்டு மத்திய அரசுக்கும், திராவிடத்தின் மத்திய அரசுக்கும் உள்ள வித்தியாசம்!

இந்தச் சிறு உவமையைப் புரிந்து கொண்டோருக்கு நம்முடைய பிரச்னையும் எளிதில் புரிந்து விடும்.

சர் ஏர்னஸ்ட் பார்க்கர் திட்ட வட்டமாகக் கூறியிருக்கிறார்:

"பல தேசிய இனங்களை உள்ளடக்கி இருக்கிற ஜனநாயக நாடானது என்றைக்காவது ஒரு நாள் அந்த நாட்டில்

❀ தொடர்ச்சி 12-ம் பக்கம்

அமைச்சர் எழுப்பும் புகைச்சல்!

அகிலம் அனைத்திலும் தற்சமயம் லட்சக் கணக்கான நோயாளிகள் எழுப்பும் கூக்குரலே கடவுளை நோக்கிக்கதறும் ஒலியாய்க்காணப்படுகிறது. 165 மில்லியன் மக்களைக் கொண்ட அமெரிக்க ஐக்கிய நாட்டில் நோயின் வேதனையைப் போக்க 2,06,250 மருத்துவர்கள் விரைகின்றனர். 360 மில்லியன் மக்களைக் கொண்ட இந்தியாவிலோ ஒன்பது ஆண்டு சுதந்திரத்திற்குப் பின் 50,000 வைத்தியர்கள் மெதுவாகத் தலை தூக்கிப்பார்க்க முனைகிறார்கள். 190 ஆண்டுகள் பழமையுடைய அமெரிக்கா 800 பேர்களுக்கு ஒரு மருத்துவரைக் கொண்டு இருக்கிறது. ஆனால் இப்பாரத புனித பூமியில் 7,200 பேர்களுக்கு ஒரு மருத்துவரே உள்ளனர்.

அமெரிக்க மருத்துவ நிலையங்களில் 104 மனிதர்களுக்கு ஒரு படுக்கை வீதம் காணப்படுகிறது. ஆனால் நாமோ 4,931 மனிதர்களுக்கு ஒரு படுக்கை வீதம் கொடுக்கும் நிலையில் உள்ளோம். சுதந்திரம் பெற்ற ஆண்டாகிய 1947-ல் நமது நாட்டில் மருத்துவ நிலையங்களில் 61,000 படுக்கைகள் இருந்தன. 1954-ல்-அதாவது ஏழு ஆண்டு காலத்தில் மொத்தத்தில் 73,000 படுக்கைகளாக ஆனது. எனவே, ஏழாண்டு காலத்தில் அதிகரித்துள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 12,000 ஆகும். மருத்துவ நிபுணர்கள் நமது நாட்டில் 1,000 மக்களுக்கு ஏழு படுக்கைகள் வீதம் வேண்டும் எனக் கூறுகிறார்கள். அவர்கள் திட்டப்படி குறைந்த அளவு 25,20,000 படுக்கைகளாவது வேண்டும், இக்கணக்கின்படி தற்சமயம் இருப்பது போக, 1,79,000 படுக்கைகள் தேவைப்படுகின்றன.

ஏழாண்டுகளில் 12,000 படுக்கைகளை அதிகப்படுத்தியிருப்பதால், நமக்கு தேவைப்படும் 1,79,000 படுக்கைகளை நாம் பெற இந்தக் கணக்கின்படி 104 ஆண்டுகள் பிடிக்கும். இக்காலத்திற்குள் நமது சுகாதார மந்திரி அமிர்த கௌரின் எலும்புக்கூடு நூறாண்டு பழமையுடைய புராதன புதை பொருட் சின்னமாகி விடும். மேலும் நாட்டின் ஜனத்தொகை வறுமை, வெள்ளம், பஞ்சம், அரசியல், தொத்துநோய் முதலிய இன்னல்களுக்கு இடையிலும் சற்றேறக்குறைய 800 மில்லியனாகப் பெருகிவிடும். இப்பெருக்கத்தின் காரணமாக மொத்தத்தில் 56,00,000 படுக்கைகள் தேவைப்படும். மீண்டும் இதில் 30,80,000 படுக்கைகள் பற்றாக் குறையாக இருக்கும்.

நமது நாட்டின் 'அழியாச் செல்வமான' சிலமுக்கிய நோய்களின் நிலையை ஈண்டு நோக்குவோம்.

க்ஷயரோகம் : இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 25 லட்சம் மக்கள் இந்நோயினால் அவதியுறுகிறார்கள், இதில் 5 லட்சம் மக்கள் மாளுகிறார்கள். அதாவது நிமிடத்திற்கு ஒருவராகச் சாகிறார்கள். ராஜகுமாரி அமிர்த கௌரின் க்ஷயரோக சீல்கள் விற்பனைத் திட்டம், மேல் நாட்டின் உதவிகள் முதலியன இருந்தும் 192 க்ஷயரோக நோயாளிகளுக்கு ஒரு படுக்கை வீதம்தான் கொடுக்க முடிகிறது.

மலேரியா : ஆண்டுதோறும் இப்பிணியினால் 750 லட்சம் மக்கள் துன்புறுகிறார்கள். இவர்களில் 8 லட்சம் மக்கள் மாண்டு போகிறார்கள். மற்றும் 8 லட்சம்பேர் இதன் மறைமுக விளைவினால் மாண்டு போகின்றனர்.

புற்றுநோய் : இந் நாட்டில் அறுவருக்கு ஒருவர் வீதம் இந்நோயினால் அல்லலுற்று அவதிப்படுவதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். அதாவது 6 கோடி மக்கள் இக்கொடிய நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களில் இரண்டு லட்சம் பேர்கள் இக் கொடிய 'கூற்றுவனு'க்குப் பலியாகிறார்கள். அதாவது நாளுக்கு 548 சாவு. நாள் தோறும் மடியும் 2,000 மக்களில் பாரதத்தின் தாராள நன்கொடை விகிதம் 27·2 சதவீதமாக அமைகிறது.

குஷ்டம் : இந் நாட்டில் அவதிப்பட்டு, அல்லல்பட்டு நடைப் பிணமாக உலவும் மக்கள் 50 லட்சமாக உள்ளனர். இந்நோய் நிவாரணத்திற்கு செய்துள்ள ஏற்பாடுகள் குறிப்பிட்டுக்கூறும் அளவில் அமையவில்லை.

பைத்தியம் : 7,18,000-க்கு மேற்பட்ட பைத்தியத்தினால் பிடிக்கப்பட்டவர்கள் இங்கு காணப்படுகின்றனர். இவர்களில் 12,304 பேர்களே மருத்துவ விடுதியில் இருந்துவர வசதியுள்ளது. கண்ணுக்கும் கணக்குக்கும் கட்டுப்படாமல் பதவி மோகம் பிடித்தலையும் காங்கிரஸ்காரர்களைத் தவிர்த்து, 7,05,698 நோயாளிகள் அநாதையாக அலைகிறார்கள்.

குருடு : இதில் உலகில் முதன்மை இடம் நமக்குத்தான்! நம் திரு நாட்டில் 20 லட்சம் குருடர்கள் இருக்கிறார்கள். அதாவது இது உலகக் குருடர்களில் 5-ல் ஒரு பங்கு. நம்மிடம் 32 நிலையங்கள்தான் இந்நோயைத் தீர்ப்பதற்கு காணப்படுகின்றன. அவைகள் 1,200 பேர்களுக்கே இடம் அளிக்கின்றன.

பரம்பரை நோயாக ஏற்படும் நோய்களின் கதைகளுக்கு கணக்கே இல்லை. நம்மைவிட மோசமான நிலை 7 ஆண்டுகளுக்கு முன்னால் சீனாவில்தான் காணப்பட்டது.

தேசப் பிதா என அழைக்கப்படும் காந்தியார் பெண்களே இயற்கை மருத்துவச்சி என எண்ணி முதல் சுதந்திர சுகாதார அமைச்சர் பதவிக்கு ராஜகுமாரி அமிர்தகௌரின் பெயரைக் குறிப்பிட்டார். ஆனால் தாய்மை நிலை எய்தாத ஒருத்தி ஒருபொழுதும் மருத்துவச்சியாக அமைய முடியாது என்பதை காந்தியார் உணர்ந்தார் இல்லை போலும். 67 வயதான குமாரி அமிர்தகௌர் கடந்த ஒன்பது ஆண்டு காலமாக இந்தப் பாரத நாட்டின் சுகாதாரப் பொறுப்பை ஏற்று வருகிறார். ஏதாவது நொண்டிச் சாக்குகளைச் சொல்லி 13 முறைகள் அயல் நாடு சென்று இருக்கிறார் அவர். அம்மையான் முக்கிய பிரயாணங்களாவன:

1948 உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு இந்திய குழுத்தலைவராகச் சென்றது.
1949லும் அப்படியே.
1950 „
1951 „
1953 மே-மாஸ்கோ பிரயாணம் (ருஷ்யா)
1953 ஜூன்-ஜினிவா பிரயாணம் (சுவிட்சர்லாந்து)
1953 அக்டோபர்-ரெங்கூன் பிரயாணம் (பர்மா)
1954 மே-ஆஸ்லோ பிரயாணம் (நார்வே)
1954 ஜூன்-லண்டன் பிரயாணம் (இங்கிலாந்து)
1954 அக்டோபர்-நியூயார்க், வாஷிங்டன், ஸான்பிரான்ஸிஸ்கோ பிரயாணம் (அமெரிக்கா)
1955 அக்டோபர்—பீக்கிங், ஷாங்கே (சீனா)
1956 மே, ஜூன், ஜூலை—நியூயார்க், வாஷிங்டன், பர்ன்ஸ்டன், விஸ்கான்ஷின், லாஸ் ஏன்ஜல்ஸ் (அமெரிக்கா) டோக்கியோ—(ஜப்பான்)

ஆகஸ்டு 1947 லிருந்து ஜூலை 1956 வரை 108 மாதங்களாக அமிர்தகௌரி இப்பொறுப்பை வகித்துவருகிறார். இதில் 70 மாதங்கள் அயல் நாடுகளில் கழித்துள்ளார். இந்தப்பிரயாணங்களால் அவர்களது புகழ் அதிகப்பட்டதே ஒழிய மக்களுக்கு எந்தப் பயனையும் அளிக்கவில்லை. எஞ்சியுள்ள 38 மாதங்களில் பெரும்பாலும் இவர் நேருவைப்பார்ப்பதிலும், பிரயாணத்திற்கு மூட்டை முடிச்சுக்களை கட்டுவதிலும் காலத்தைக் கழித்திருக்கலாம்!

அமிர்தகௌர் சீனப் பிரயாணத்திற்குப்பின் புதுடெல்லியில் நிருபர்கள் கூட்டத்தில் 1955 அக்டோபர் 31-ம் தேதியில் தனது சுகாதாரத் திட்டத் தோல்விகளுக்குக் காரணங்களை விளக்கியுள்ளார்கள். சுகாதாரத் திட்டங்களில் மாகாணங்கள் சுயேச்சையாக இயங்கி வருவதால் தன் திட்டப்படி முன்னேற முடியவில்லை யென்றும் கூறுகிறார். இம்மூதாட்டி குற்றத்தையும் குறைகளையும் மாகாணங்களின் தலையில் போட்டு தப்பிக்கொண்டார். ராஜகுமாரி அமிர்தகௌர் குற்றம் சாட்டுவது போல், நாட்டின் சுகாதார திட்டங்களில் மாகாண சர்க்கார்கள் ஏதேச்ச அதிகாரமும், பிடிவாதமும் கொண்டு ஒத்துழைக்காமல் இருக்குமானால், மத்திய அரசில் சுகாதார மந்திரி ஏன்? பல்லாயிரக் கணக்கான மக்களின் நோய்க் கூக்குரலின் வேதனையை சாதனை என்று கூறிக்கொள்ளும் மத்திய மந்திரி மாகாணங்களுக்காக ஏன்? ஏன்?

-ஏ.பி.சம்பந்தம் பி.ஏ. (ஆனர்ஸ்)

சுருளி மலை
மு. கருணாநிதி எழுதும்
காதல்—வீரம் கலந்த உணர்ச்சிமிக்க தொடர் சித்திரம் !
'முரசொலி'யில் .... விரைவில் !

21

"நயினு! என்னை மன்னித்துவிடு. உள்ளம் எனக்கு மட்டும் இருப்பதாகவும், உலகில் உள்ள பொருள்களுக்கு உரிமை கொண்டாடும் பாத்யதை எனக்கே ஏகபோகமாக எழுதி வைக்கப்பட்டிருப்பதாகவும் எண்ணி, என்னை நானே ஏமாற்றிக் கொண்டு விட்டேன். வாலிபம் செறிந்த உன் இருதயத்தில் வனப்பு மிகுந்த பருவப் பெண்ணுளுக்கு நீ காதல்வீடு கட்டிக் கொடுப்பதால் எனக்கு ஏன் பொருமை ஏற்பட வேண்டும்? என்னையும் மீறி-என் நட்பையும் மீறி அப்படியொரு தீய சக்தி என் நெஞ்சிலே திரிந்தது மன்னிக்க முடியாத பெருங் குற்றமல்லவா? எனதருமை நண்பனே! இன்ப துன்பங்களில் இணைபிரியாதிருந்த ஆருயிர்த் தோழனே!...என்னை மன்னித்து விடடா!...மண்ணுலும் பொன்னுலும் பிரிக்க முடியாத நமது தூய நட்பு ஒரு பெண்ணுல் பிரிக்கப்பட்டு விட்டது என்ற பழி—பாவம்; அந்த அன்புச் சகோதரி ஆனந்திக்கு ஏற்பட வேண்டாம்! என் ரத்தத்தில் எங்கேயோ ஒளிந்து கொண்டிருந்த வெறியுணர்ச்சி சூடேறிக் கிளம்பி சூருவளியை உண்டாக்கி விட்டு இப்போது மறைந்து விட்டது! இனி அந்த வெறி தலைகாட்டாது! என்னை மன்னித்து விடு!"

இப்படி அழத் தொடங்கினுன் அழகப்பன். நயினுவும் கண்களிலேயிருந்து வழியும் நீர் வீழ்ச்சியைத் தடுத்திட முடியாமல், நண்பனைக்கட்டித்தழுவியவாறு, 'இப்படியெல்லாம் பேசாதே அழகு!.........ஏதோ நடந்தது நடந்து விட்டது. இவைகளையெல்லாம் உருவற்ற கனவாக மதித்து நடக்கவேண்டியவைகளை கவனிப்போம். மன்னிப்பு கேட்கிருயே என்னிடம்—உன்னை மன்னிக்க நான் யார்?...நீயென்ன அவ்வளவு பெரிய குற்றம் செய்து விட்டாய்? நீ செய்ததை உள்ளபடியே பெருங் குற்றமாக நீ நினைப்பாயானுல், அதற்கு ஒரே ஒரு 'பிராயச் சித்தம்" தான் இருக்கிறது. அதை நிறைவேற்ற முடியுமானுல் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்."

"என்ன நயினு?...சொல்லு! கட்டாயம் அந்த "பிராயச் சித்தத்"தை நிறைவேற்றுகிறேன்."

"அருமை நண்பனே!...சிந்தாமணியை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்."

"என்ன?"

"அவள் மிகவும் நல்லவள். டைகர் என்ற அந்தத் துரோகியின் தூண்டுதலால் ஆனந்தி அவளுக்குக் களங்கம் கற்பிக்க முற்பட்டாள். நாமும் அவசரப்பட்டு தவருன முடிவுக்கு வந்து

முந்திய இதழில்....

ஆனந்தி, நயினு முகம்மதின் ஆசைக் கிளியாகி விட்டாள் எனக்கேட்ட அழகப்பன், நண்பன்மீது ஆத்திரங் கொண்டு அவனை அடிக்கிருன். பின்னர், அறையில் மயக்கமுற்றிருக்கும் ஆனந்தியைப் பழிவாங்க சிந்தாமணி வந்து கொண்டிருக்கிருள். தனக்கு விபச்சாரப் பட்டம்-தந்தை, தாய் தற்கொலை—கையிலே விலங்கு—இத்தனையும் அவள் உள்ளத்தைக் குடைந்திடவே உத்வேகத்தோடு அவள் ஆனந்தியைக் கொல்ல நெருங்குகிருள். இதற்கிடையே அழகப்பனும் நயினுவும் சந்தித்து தங்கள் செயல்களுக்கு வருந்துகின்றனர். நயினு, ஆனந்தியின் காதலைத் தியாகம் செய்யத் தயாராகிருன். அந்த எண்ணத்தைத் தடுத்தவாறு நண்பனின் காலைக் கட்டிக்கொள்கிருன் அழகப்பன்—பிறகு...

விட்டோம். ஆனந்தி, டைகருக்குப் பயந்து செய்த காரியம் அவள் மனச் சாட்சியைக் குடைய ஆரம்பித்தவுடன் உண்மையை நம்மிடம் சொல்ல ஓடி வந்திருக்கிருள். அதன் பிறகு தான் கார் விபத்து...இதுவரையில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாமே!..."

"சிந்தாமணி கைது செய்யப் பட்டிருப்பது எப்படி?" என்ருன் அழகு.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை...ஒருவேளை அவள் நம்மைப் பார்க்க பெங்களூர் ஓடி வந்திருக்க வேண்டும்—வரும் வழியில் இப்படியொரு அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கலாம் என்று நான் யூகிக்கிறேன். சிந்தாமணியைப் பற்றி, ஆனந்தி கூறும் பாராட்டுரைகளைக் கேட்கும்போது, அவள் ஒரு பத்தரை மாற்றுப் பசும்பொன் என்றுதான் தீர்மானிக்க வேண்டும். உன் மனதைத் திருப்ப முயல்வதாக நினைக்காதே அழகு! உண்மையாகவே சிந்தாமணி மாசற்றவள்!"

"எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது நயினு! என்னுல் எதையுமே சிந்திக்க முடியவில்லை..."

"சிந்திக்க நேரம் எடுத்துக் கொள். சிந்தாமணியைப் பற்றி எந்த அவசரமான முடிவுக்கும் இப்போது வரத் தேவையில்லை. மாசு படிந்தவள் என்று நாம் முடிவு கட்டுகிற ஒரு வார்த்தையால் ஒரு பெண்ணின் வாழ்வே அஸ்தமித்துப்போகும் நிலைமை ஏற்படுகிறது என்பதை மட்டும் அடிப்படையாக வைத்து, அவளைப் பற்றிய ஆராய்ச்சியை நடத்தி தீர்க்கமான முடிவுக்கு வருவது நல்லது நண்பா!"

"சரி நயினு!......நீ கூறுவது போலவே அவகாசமெடுத்துக் கொண்டு, அதைப்பற்றி முடிவு கூறுகிறேன்......வா, ஆனந்தியிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்!..."

நயினுவும், அழகுவும் அவர்கள் அறையை விட்டுப் புறப்பட்டு ஆனந்தியிருக்கும் அறை நோக்கிப் புறப்பட்டார்கள்... ஆனந்தியைச் சமாதானம் செய்து தன்னுடைய தங்கையாக ஏற்றுக்கொள்ள எண்ணி நடந்தான் அழகு! புயலுக்குப் பின் அமைதி உருவாகியிருப்பதாக நினைத்து மகிழ்ந்தான் நயினு.

ஆனுல் இந்த இருவரின் எண்ணத்திலும் மண்ணைப் போடுவது போன்ற பயங்கரமான காட்சியை ஆனந்தியின் அறையிலே கண்டார்கள்.

ஆம்; ஆனந்தி, பிணமாகக் கிடந்தாள் கட்டிலின்மீது!... கட்டில் முழுவதும் ரத்த மயமாக இருந்தது. தலையிலேயிருந்து 'குபு குபு' வென்று குருதி பொழிந்து கொண்டேயிருந்தது. கீழே, கட்டிலின் ஓரமாக அம்மிக் குழவியொன்றும் கிடந்தது. நயினு, "அய்யோ!" என்று அலறி விட்டான். அழகப்பனும் கூச்சலிட்டான். அழகப்பனை நயினு பிடித்துக் கொண்டு, "அடப்பாவி!...நீதானு இவ்வளவு பெரிய அக்கிரமத்தைச் செய்து விட்டாய்!...உன் எண்ணம் ஈடேருத காரணத்தால் இவ்வளவு பெரிய இழி செயலுக்குத் துணிந்து விட்டாயே; அழகப்பா! எப்போதடா உன் மனம் இது போன்ற கொடூர வேலைகளுக்குத் துணிந்தது?" என்று கதறினுன்.

அழகப்பனே திகைத்துப் போய், நயினுவைப் பார்த்து, "அய்யோ! பழியைப்போடாதே நயினு!...எனக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தமேயில்லை. வீணுக என்னைச் சம்பந்தப் படுத்தி என் மீது சண்டாளப் பட்டம் சுமத்தாதே!" என்று அலறினுன்.

நயினு, அழகப்பனை நம்பத் தயாராய் இல்லை. முழு நிலவு மூளியாக்கப்பட்டது போல் சிதறுண்டு கிடக்கும் சித்திரப் பொற்பாவையாம் ஆனந்தியின் பிணத்தின் மீது விழுந்து தன்னை மறந்து புலம்ப ஆரம்பித்தான் நயினு.

"அய்யோ ஆனந்தி! உன் வாழ்வுக்கு முடிவு தேடும் காரியத்திற்கு நானல்லவா காரணகர்த்தாவானேன். நம்மிடையே ஏற்பட்ட காதல் அல்லவா — கட்டழகே! உன் வாழ்வை மாய்க்கும் கருவியாக மாறிவிட்டது! அழகப்பா! தியாகம் செய்ய முடியாத பொருளை—தேடக் கிடைக்காத இந்த திரவியத்தை தியாகம் செய்கிறேன் என்று உன்னிடம் கூறினேனே; அப்படியிருந்தும் ஏனடா பாவி; அவளை அழித்து

விட்டாய்? நீ என்ன செய்வாய்? உனக்குப் பயனில்லாத பொருள் உலகிலே இருக்க வேண்டாமென்று நினைத்து விட்டாய் போலும்! என் செல்வத்தை சீரழித்துவிட்டு என்னிடமே நல்லவனைப் போல நடித்து என்னை மயக்கி விட்டாயே; கொலைகாரா!"

நயினுவினால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை. ஆனந்தியோ எந்தக் கவலையுமின்றி நீங்காத் துயிலில் கிடந்தாள். அழகப்பன் அதிர்ச்சியுற்று தன் நிலையை விளக்க முடியாமல் தவித்தான். அவனுக்கும் அந்தக் கொலைக்கும் எந்த சம்பந்தமுமில்லை. அவன் அதைச் சொன்னால் நயினு நம்பத் தயாராகவும் இல்லை. என்ன செய்வான்; பாவம்-நடப்பது நடக்கட்டும் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டான். மாடிப்படிகளில் கனமான 'பூட்சு'கள் எழுப்பும் சப்தம் தொடர்ந்து கேட்டபடியிருந்தது. ஏழெட்டுப் பேர் நடந்து வருகிறார்கள் என்பதை அந்த ஒலி விளக்கியது.

நயினுவும், அழகுவும், ஒலி வந்த திக்கை நோக்கியவாறு நின்றனர். ஏழெட்டுப் போலீசார் 'திபு திபு' வென்று பிரவேசித்தனர்......

அவர்கள் எப்படி வந்தனர்? யார் அவர்களுக்குத்தகவல் கொடுத்திருப்பார்கள்?

இந்தக் கேள்வி, அழகு—நயினு இருவரையும் வியப்பில் ஆழ்த்தியது! போலீசாரின் பின்னாலேயே வேம்பு வந்து கொண்டிருந்தான். அவன் முகத்தில் சோகம் கப்பிக் கொண்டிருந்தது. அழுதழுது கண்கள் சிவந்திருந்தன அவனுக்கு!

"இவர்களில் யார் நயினு முகம்மது?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர், வேம்புவிடம்! வேம்பு, நயினுவை அடையாளங் காட்டினான். அதற்குள், அழகப்பன் இன்ஸ்பெக்டரிடம் வந்து — "ஏன் சார்?" என்றான் ஆவலாக!

"நயினு முகம்மது இந்தக் கொலை சம்பந்தமாக கைது செய்யப்படுகிறான்" என்றார் இன்ஸ்பெக்டர்.

உடனே அழகப்பன் — "இல்லை சார் இல்லை! நயினுவுக்கும் இந்தக் கொலைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. நான்தான் ஆனந்தியைக் கொலை செய்தேன்" என்று கூவினான்.

உடனே, நயினு — "அழகப்பன் சொல்வது பொய்! நான் தான் அவளைக் கொலை செய்தேன்!" என்று கத்தினான். ஆருயிர் நண்பர்கள் இருவரும் ஒருவருக்காக ஒருவர் தங்கள் வாழ்வையே தியாகம் செய்யத் தயாராகி விட்டார்கள்.

அழகப்பன்தான் காமவெறியில் ஆனந்தியைத் தொலைத்து விட்டான் என்ற உறுதியான கருத்து நயினுவுக்கு இருந்த போதிலும் நண்பனைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை.

அழகப்பனின் மெத் தாயார் நயினுவுக்கு எதிரே வந்து நின்று கண்ணீர் மல்கியவாறு 'என் மகனைக்காப்பாற்றடா!' என்று கெஞ்சுவது போல் இருந்தது, நயினுவுக்கு!

அழகப்பனோ, யார் செய்த கொலைக்கோ தன் நண்பன் பலியாகிறானே என்ற பதட்டத்திலும் — நண்பன் தன்னை சந்தேகித்த பிறகும் உயிர் வாழ விரும்பாத விரக்தியிலும் — தானே கொலை செய்ததாக சாதிக்கத் துவங்கினான்.

இருவரும் போட்டி போட்டுக் கொண்டு தாங்கள்தான் குற்றவாளி யென்று வாதாடுவது கண்ட போலீசார் திகைத்தனர்.

வேம்பு சொன்னான்: "எனக்கு இந்த ரெண்டு பேர் மேலேயும் சந்தேகம் சார்!" என்று!

திகைப்பிலாழ்ந்த இன்ஸ்பெக்டரும், அழகு, நயினு இருவரையும் கைது செய்ய உத்திரவிட்டார். ஆனந்தியின் பிரேதம் பரிசோதனைக்காக பாலையூர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

எந்தப் பாலையூர் மருத்துவமனையில் ஆனந்திக்கும் நயினுவுக்கும் காதல் வளர்ந்ததோ, அந்தப் பாலையூர் மருத்துவ மனைக்கு அவளது சவம் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டது. அழகுவும், நயினுவும் விலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

❋

வீட்டிலே பிணமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் தாயாரின் காலடியிலே தலையை மோதிக் கொண்டு, சிந்தாமணி அழத் தொடங்கினாள். "அம்மா! அந்தப்பாதகி ஆனந்தியை என்னால் பழிவாங்க முடியவில்லை!... அதற்குள் யாரோ அந்த வேலையைச் செய்து முடித்து விட்டார்கள்!" என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள்!

—(தொடரும்)

தென் பாண்டித் தங்கம் கே. வி. கே. சாமி அவர்களின் சடலம் நாகம்மை வாசக சாலையில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டபோது எடுத்தபடம். குறியிட்டிருக்கும் தோழர்தான் கொலை நடந்த நேரத்தில் சாமியுடன் சென்ற தோழர் நடராசன்!

கே. வி. கே. சாமி படுகொலை

சென்னையில் 30—9—56 ஞாயிறன்று
மாலை 3-மணிக்கு, நேப்பியர் பார்க்கிலிருந்து
பொதுச் செயலாளர்:
இரா. நெடுஞ்செழியன்
அவர்கள் தலைமையில், மௌன ஊர்வலம் புறப்படும்.
மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி
அணிவகுத்து வருவர்.
மாலை 6-மணிக்கு, வண்ணை—கல்லறைத் திடலில்,
அனுதாபக் கூட்டம் நடைபெறும்.

கிடைத்தற்கரிய செல்வத்தைப் பறிகொடுத்துத் தவிக்கும் தூத்துக்குடி மக்கள் ஆயிரக்கணக்கில் அணிவகுத்துச் சென்று மாவீரனுக்குத் தங்கள் கடைசி மரியாதையைத் தெரிவித்தனர். (1) செயல் சிங்கத்தின் சவம் இலட்சிய வாதிகளுக்கு மலர் தூவிய பஞ்சணையாம் இடுகாட்டை நோக்கி ஊர்வலமாகச் செல்கிறது. (2) நாகம்மை வாசகசாலையில் இறுதி முறையாக தங்கள் இளஞ் சகோதரனைச் சந்திக்க ஆயிரக்கணக்கான தாய்மார்களும் தங்கள் கைக்குழந்தைகளுடன் அலை அலையாக கண்ணீர் வடித்தபடி வந்திருந்தனர். (படம்: பெ. நடராசன், தூத்துக்குடி)

கடவுளே காமுகனாக வந்தாலும்....

✲ 2-ம் பக்கத் தொடர்ச்சி

உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. முதலாவதாக என் மகள்—உன் மனைவி நீவிர் வந்த போது வேறொருவனுடன் கள்ள உறவு கொண்டு இருந்திருக்கிறாள். இரண்டாவதாக, உம்மிடம் கொஞ்சி விளையாடாத அளவுக்கு அவனோடு கொஞ்சி மகிழ்ந்திருக்கிறாள். ஆகவே மாப்பிள்ளை அவர்களே; உமக்குத் தடையாக இருந்த அந்த இரு காரியங்களும் இனி நடைபெறாமல் பார்த்துக் கொள்கிறேன். அதன்படி (1) இனிமேல் உன் மனைவி நீவிர் வரும்போது கள்ள புருஷனோடு தொடர்பு வைத்துக் கொள்ளமாட்டாள். (2) உம்மிடமிருப்பதைப் போலவே அவனிடத்திலும் சரச, சல்லாப, உல்லாச லீலைகளில் ஈடுபடுவாள். இனிமேல் கவலை வேண்டாம் மாப்பிள்ளை அவர்களே!"—இப்படிப் பதில் கூறினாளாம் அந்த மாமியார்!

அசட்டு மாப்பிள்ளை ஒருவனுக்கு இவ்வாறு புத்தி கூறிய மாமியாரின் பதிலைப் போலத்தான் 'இவர்கள்' பதிலும் அமைந்திருக்கிறது.

மனைவி சொந்தம் என்னும் போது அங்கே மாற்றான் விரட்டியடிக்கப்பட வேண்டியவனாகிறான்!

மனைவியென்கிற ஒரு பெண்ணிடமிருந்து அனுபவிக்கிற இன்பம் பெரிதல்ல; கடவுளே கள்ளக்காதலனாக வந்தபோதிலும் மானமே பெரிது; உயிரினும் பெரிது—என்கிற நிலைமை ஏற்படுகிறது அங்கே!

அதே போலத்தான் ஒரு நாடும்! கொட்டிக் கொடுத்தாலும்; வட்டியின்றி வாரி இறைத்தாலும்; தென்னகமே! திகட்டாத தேன் அமுதமே—என்று திராவிடச் செல்வியிடம் கொஞ்சிப் பேசினாலும் அவர்கள் சென்னியைக் கிள்ளி எறிய வேண்டியவர்களாகிறோம், நாம்!

அவ்வளவு ஏன்; பல நூற்றாண்டுகளாக இங்கு ஆட்சி புரிந்துவந்த வெள்ளையனைத்தான் எடுத்துக்கொள்வோமே!

ஏன் அவன் இந்த நாட்டை விட்டு விரட்டியடிக்கப் பட்டான்?

நல்ல முறையில் ஆட்சி நடத்தத் தெரியாதவன் என்ற காரணத்தினாலா?

இல்லை; இந்த வடநாட்டுக் கொள்ளையர்களைவிட வெள்ளையன் ஆட்சிக் கலையில் எவ்வளவோ தேர்ந்தவன்.

பின்னர் ஏன் அவன் துரத்தப்பட்டான்?

நாட்டுக்கு நல்லது ஏதும் செய்யவில்லை என்ற காரணத்தாலா?

அதுவும் இல்லை.

அவன் செய்த காரியங்கள் எத்தனையோ இந்நாட்டவரின் மெச்சுதலைப் பெற வேண்டியவையாய் இருக்கின்றன.

மேல் உலகத்தைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்த 'இந்தியனை' இந்த உலகத்தைப் பற்றிக் கவலைப்பட வைத்தது வெள்ளையர் தொடர்பு.

மேலும்; வெள்ளையன் இந்த நாட்டை வெற்றி கொண்ட வீரனாகக் கொடுங்கோல் புரியவில்லை. எப்படி ரோமானியர்கள் ஒரு நாட்டைக் கைப்பற்றி, அந் நாட்டவர்களோடு ஒன்றிப் போனார்களோ அதைப் போலவேதான் வெள்ளையனும் செய்தான்.

உதாரணமாக முகமது கஜினி போன்ற சிலர் கொள்ளையடிப்பதற்காக இந்த நாட்டின் மீது படையெடுத்து வந்தனர்.

அதைப் போலவே ஸ்பானியர்கள் தென் அமெரிக்காவைக் ஆட்கொண்டதும், அங்குள்ள குடிமக்களின் நலனுக்காக மயிரிழையும் பாடுபட்டார்களில்லை. பூர்வ குடிகளையெல்லாம் அடிமைகளைவிடக் கேவலமாக நடத்தினார்கள்.

ஆனால் ஆங்கிலேயன் அப்படியல்ல; 'இந்தியன்' ஒவ்வொருவனும் அவனால் உயர்ந்தான்,

இந்தியாவில் அராஜக ஆட்சி நடத்திய அத்தனை உத்யோகஸ்தர்களும் தக்க முறையில் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள்.

பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்துக்கு அஸ்திவாரமிட்டதாகச் சொல்லப்படும் ராபர்ட் கிளைவ் கூட தண்டனைக்குத் தப்பவில்லை; தவறாக கிழக்கிந்தியக் கம்பெனியைப் பயன் படுத்தியதால் இங்கிலாந்திலே வழக்கு தொடரப்பட்டு சில நாட்கள் விசாரணைக் கைதியாகக் காலங் கழித்தான்!

வாரன் ஹேஸ்டிங்ஸ் கூட இதற்குத் தப்ப வில்லை. ஊழல் உடையது அவன் ஆட்சி என்பதற்காக அவனும் வழக்கு மன்றத்திற்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தப் பட்டான்.

—ஆக நேர்மை வழியில்தான் ஆங்கிலேயன் ஆண்டிருக்கிறான்!

சதி அல்லது உடன் கட்டை ஏறுதல் போன்ற கொடிய வழக்கங்கள் வெள்ளையன் போட்ட சட்டத்தினால் மாய்ந்திருக்கின்றன.

பிண்டார் போன்ற கொள்ளைக்காரர்கள் வட நாட்டின் பல பகுதிகளில் சூறையாடிக் கொண்டிருந்த போது, 'நமக்கென்ன; இந்தியர்களின் உயிரும் பணமும்தானே போகிறது' என்று அவன் வாளாவிருக்கவில்லை. முழு ஆற்றலையும் உபயோகித்து கள்வர் பயத்தையே ஒழித்தனர். ஆனால் அதே நேரத்தில் இலங்கையிலிருந்து கூட்டம் கூட்டமாகத் தமிழர்கள் துரத்தியடிக்கப் படுகிறார்கள் என்னும் போது, இந்த வடநாட்டு அரசு அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதையும் இங்கே நம்மால் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

ஆங்கிலேயன் இந்த நாட்டிலே போக்கு வரத்தைச் சீர் செய்து கொடுத்தான். ரயில், தந்தி, தபால்—அவன் தந்ததுதான்.

இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலேயன் மட்டும் சிறிது சாணக்கியத் தன்மையுடன் பணி புரிந்து, எந்த இந்தியனுக்கும் மேற்படிப்புக்கு வசதி செய்யாமல் விட்டிருந்தால் அவனை எதிர்த்துப் பேச இந்த உபகண்டத்திலே ஒரு தூசு கூட முன் வராமல் போயிருக்கும். ஆனால் இதை அவன் செய்யவில்லை. மகாத்மா காந்தி, சுபாஷ், நேரு போன்றவர்கள் வெள்ளையன் நாடு சென்று, பயின்று, 'வெள்ளையனே வெளியேறு!' என்று கோஷித்தனர். அவ்வளவு வசதி செய்து கொடுத்தான் அவன்!

அதனால்தான் 1913-ம் ஆண்டு நடைபெற்ற முஸ்லீம் லீக் மாநாட்டிற்குத் தலைமைவகித்த சர். இப்ராஹிம் ரஹிம்துல்லா கீழ்க்கண்டவாறு கூறினார்:

"நான் இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமுள்ள தொடர்பை 'மைனர்' குழந்தைகளுக்கும் ஒரு 'கார்டியனு'க்கும் உள்ள தொடர்பாகக் கருதுகிறேன்!"

—அவ்வளவு பண்பட்டிருந்தது, வெள்ளையன் ஆட்சி!

ஆனால் ஜாலியன் வாலாபாக்கில் ஆயிரக் கணக்கில் உயிர்களைச் சுட்டுக்கொன்றானே—என்று கேட்கலாம்.

அவனே பத்து நிமிஷம், 1650 ரவுண்டுகள்தான் சுட்டான். ஆனால் நமது அகிம்சா மூர்த்திகளோ பம்பாயிலே இரண்டாயிரம் ரவுண்டுகள் சுட்டு, டயர் சகோதரர்களை நல்லவர்களாக்கி விட்டார்கள்.

✲ தொடர்ச்சி 10-ம் பக்கம்

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப் பயணம்

★

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தேர்தல் ஆய்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத் தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள்.

ஆய்வுக் குழு செல்லும் இடங்கள்:

அக்டோபர்

12 :	காஞ்சீபுரம்	... ...	காலை	9	மணி
,,	வேலூர்	... ...	மாலை	6	,,
13 :	திருப்பத்தூர்	... ...	காலை	9	,,
,,	கிருஷ்ணகிரி	... ...	மாலை	6	,,
14 :	சேலம்	... ...	காலை	9	,,
,,	ஈரோடு	... ...	மாலை	6	,,
15 :	கோயமுத்தூர்	... ...	காலை	9	,,
,,	உடுமலைப்பேட்டை	... ...	மாலை	6	,,
16 :	கரூர்	... ...	காலை	9	,,
,,	திருச்சி	... ...	மாலை	6	,,
17 :	பெரியகுளம்	... ...	மாலை	6	,,
18 :	மதுரை	... ...	காலை	9	,,
,,	விருதுநகர்	... ...	மாலை	6	,,
19 :	திருநெல்வேலி	... ...	காலை	9	,,
,,	நாகர்கோவில்	... ...	மாலை	6	,,
20 :	குற்றாலம்	... ...	மாலை	6	,,
21 :	காரைக்குடி	... ...	மாலை	6	,,
22 :	பட்டுக்கோட்டை	... ...	காலை	9	,,
,,	மாயவரம்	... ...	மாலை	6	,,
23 :	கடலூர்	... ...	காலை	9	,,

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்.

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக்கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும், ஆதரவாளரும், அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

பொழுதுபோக்கு

'டெமாஸ்தனீஸ்'

எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்!

—பாரதிதாசன்

மறைந்த மாவீரர் கே. வி. கே. சாமி அவர்கள் அந்தத் திருநாளை எய்தி விட்டார்! அரும்பாத முல்லையை—அரும்பி மணம் வீசினால், தங்களின் போலிப் புகழ் மாய்த்து, நாட்டில் பரப்பிய நச்சுக் காற்றை ஓட்டி விரட்டிடும் உயர் தனி மலராகி விட்டால் என்ன செய்வது என்று ஏங்கியோரின் இருள் கரங்கள்—கொய்துவிட்டன. லட்சியப் பணியில் உயிர் நீப்போர், வரலாற்றுச் சோலையின் வாடா மலர்கள்! லட்சிய வீரனைச் சாய்த்துவிட்டால், லட்சியமும் செத்துவிடும் என எண்ணிடும் பித்து மனம் கொண்டோர் செய்துவிட்ட பேதமைதான் என்ன! பூத உடலால் புவியில் பம்பரமெனச் சுழன்று, பணிபுரிந்த அந்த தீரனின் புகழுடல் செய்து காட்டவிருக்கும் சீரிய பணியினைச் சிந்தித்திலரோ அந்தச் சிறுமதியினர்!

வாழ்ந்த இனத்தின் வரலாறு அறிந்து, அதை வாழ்விக்கும் வகையும் தெரிந்து, லட்சிய தீபத்தைக் கையிலேந்தி இன்பத் திராவிடம் நோக்கி ஏறுநடை போடும் நாம், மறைந்த வீரனின் மறையாத தொண்டினை எண்ணி, கடமை மறவாமல், கண்ணியம் குறையாமல், கட்டுப்பாட்டுடன் பணியாற்றுவோமாக!

* * *

அனைத்திந்திய உற்பத்தியாளர் கழகத்தில் பேசிய தொழில் நிபுணர் விஸ்வேஸ்வரய்யா அவர்கள் மூன்று முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்:

1. கல்வித் துறைக்குச் செலுத்த வேண்டிய கவனத்தை அரசாங்கம் செலுத்தத் தவறிவிட்டது.

2. தொட்டதற்கெல்லாம் வெளி நாட்டுத் தொழில் நிபுணர்களை வரவழைக்கும் பழக்கம் மிகுந்துவிட்டது.

3. மத்தியதர வியாபாரிகளும், தொழிலதிபர்களும் கடுமையான வரி விதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இந்த மூன்று குற்றச்சாட்டுகளும் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியவை. கல்விக்கு மத்திய அரசாங்கமும் சரி, மாநில அரசாங்கமும் சரி, மாற்றாந்தாய் மனப்பான்மையே காட்டி வந்திருக்கிறது என்பதை மத்திய அரசாங்க பட்ஜெட், மாகாண அரசாங்க பட்ஜெட் ஆகியவற்றை மேலெழுந்தவாரியாகக் கவனிப்பவர்கள்கூட நன்கு உணர முடியும். கல்வித் துறையில் மிகப் பழுத்த அனுபவம் பெற்றவரான டாக்டர் லட்சுமணசாமி அவர்கள்கூட ஒருமுறை குறிப்பிட்டார்: "நீர்த் தேக்க, தொழில் திட்டங்களை ஒதுக்கி ஒத்திப் போட்டு விட்டுக்கூட, கல்விக்கு முதலிடம் கொடுத்து அரசாங்கம் பணம் ஒதுக்க வேண்டும். ஏனென்றால், கல்விக்கு நாம் இப்பொழுது செலவழிக்கும் பணம் அடுத்த தலைமுறையின நல்வாழ்விற்கு இடும் அஸ்திவாரமாகும்."

நமது மாநிலக் கல்வி யமைச்சரைக் கேளுங்கள்—'எனக்குத் தெரியாததை இவர்கள் என்ன சொல்லி விட்டார்கள்? இந்த இலட்சுமணசாமி முதலியாரை எனக்குத் தெரியாதா என்ன; பிரிட்டிஷ்காரர் ஆண்ட காலத்தில் முன்னோடும் பிள்ளையாக இருந்தவர்தானே!' என்றெல்லாம் ஏதேதோ சொல்லுவார். பாவம், அவர் என்ன செய்வார்—எல்லாம் கிளிப்பிள்ளைப் பாடம்!

நமது மாநிலக் கல்வியமைச்சர் சுப்பிரமணியனுக்கு ஒரு விசேஷ நிலை இருக்கிறது. இந்தக் கல்வியமைச்சர் கல்விக்கு நிதி ஒதுக்க யாரையும் தொங்க வேண்டியதில்லை! ஏனெனில் இவரே நிதியமைச்சருங்கூட. வாய்ப்பிருந்தால் போதுமா? பயன்படுத்த 'வக்கு' வேண்டாமா?

* * *

இரண்டாவதாக, வெளி நாட்டு நிபுணர்களை வரவழைக்கும் விஷயம்! நிபுணத்துவம் என்பது மேல் நாட்டிற்கே உரியது போலவும், இங்கு அதற்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டிருப்பது போலவும் அரசாங்கம் எண்ணிடும் போக்கினைத்தான் தொழில் நிபுணர் விஸ்வேஸ்வரய்யா கண்டிக்கிறார். லட்சுமணசாமி முதலியாரும் அண்மையில் கர்னூல் மருத்துவக் கழகத்தில் பேசுகையில், வைத்திய மேல் படிப்பு என்பதை வெளிநாடுகளில்தான் பெற முடியும் என்ற எண்ணம் நிலவி வருவதைக் கண்டித்தார். இவர்கள் இருவரும் அவரவர் துறையில் பெரும் நிபுணர்கள் என்று மேல் நாட்டினராலேயே ஒப்புக் கொள்ளப்பட்டு கௌரவிக்கப்பட்டவர்கள். ஆனாலும் நம்முடைய அரசாங்கம், மேல் நாட்டு நிபுணர்களுக்கு கௌரவம் அளித்து அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்கின்ற அளவுக்கு இவர்களுடைய ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ள முடியுமா என்ன? நம்முடைய கதருடை கனவான்கள் நல்ல 'தேசபக்தர்கள்'! அந்நிய சரக்கு பகிஷ்காரத்திலேயே வளர்ந்தவர்கள்! அதனால்தான் ஆங்கில மொழி வேண்டாம் என்கிறார்கள்—அந்நிய நிபுணர்களை அழைக்கிறார்கள்—சொந்த நாட்டு நிபுணர்களின் ஆற்றலில் குற்றம் காண்கிறார்கள்! எல்லாம் ஜெய் ஹிந்த்!!

* * *

வேறு எந்த நாட்டையும் விட இந்த நாட்டில் வரிச் சுமை அதிகம் என்பதைப் பொருளியல் வல்லுநர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதுவரை, அரசாங்கத்தின் சார்பாக இதை யாரும் மறுக்கவில்லை. பாரதம் ஒரு மக்கள் நலநாடு — வெல்ஃபேர்ஸ்டேட்—என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இந்த லட்சியம் கொண்ட நாட்டில், செல்வம் சிலரிடம் போய்க் குவியாமல் இருக்க பெரும் தொழிலதிபர்கள் அதிக வரி விதிக்கப்படுவதுதான் முறை. ஆனால் இங்கோ வண்டிக்குப் பின்னால் குதிரை பூட்டும் நிலையைப் பார்க்கிறோம். மத்தியதர தொழிலதிபர்கள், விஸ்வேஸ்வரய்யா கூறுகிறபடி, அதிக வரி விதிப்புக்கு ஆளாகின்றனர். இதுதான் சோஷலிசத்தின் ஆவடி மாடல்!

ஹாரோ கல்லூரியில் படிக்கும்போதே சிட்னிவெப், பீட்ரிஸ்வெப், பர்னார்ட் ஷா மார்க்ஸ் போன்றவர்களின் நூல்களைக் கற்றுத் தேர்ந்து சோஷலிசம் பேசும் எங்கள் நேருவைக் கேலிசெய்ப நீயார்? தி. மு. க. வா? உனக்கென்ன அரசியல் தெரியும்?—கேட்பர் நிதியமைச்சர் சுப்பிரமணியம் போன்றார்! நேருவுக்கு வெளி நாடுகளில் சூட்டப்படும் புகழ் மாலை மட்டும் தான் தேசிய ஏடுகள் வெளியிடும். இதோ, அடுத்த பகுதியைப் படியுங்கள்.

* * *

"ஆசியாவின் குரல்" என்ற பிரபல நூலின் ஆசிரியரும், அமெரிக்க எழுத்தாளருமான ஜேம்ஸ். ஏ. மிச்சனர் நேருவைப் பற்றி எழுதுகிறார்:

"நேரு பிறவியில் ஒரு பிராம்மணர். பிராம்மண மதச் சடங்குகளை அவர் கைவிட்டு விட்டாலும், எண்ணத்தில் ஒரு பிராம்மணரைப் போலவேதான் இருந்து வருகிறார். முழுவளர்ச்சி யடையாத, கல்வி யறிவற்ற மக்களைக் கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டை, அறிவாற்றல் படைத்த ஒரு சில பிராம்மணர்கள்தான் ஆளமுடியும் என்று நம்புகிறார்.........அவருடைய குறைகளில் மிக முக்கியமானது, சிறை சென்றவர்களையே பெரும்பாலான உத்தியோகங்களில் நியமிப்பதாகும்"

இந்த விஷயங்களை ஜேம்ஸ் மிச்சனர் அமெரிக்காவிலிருந்தபடியே எழுதிவிடவில்லை, இந்தியா வந்து, இங்குள்ள அரசர்கள், தொழில் அதிபர்கள், நிர்வாகிகள், அரசியல்வாதிகள் ஆகியோரைச் சந்தித்து விஷயங்களைச் சேகரித்தே எழுதியுள்ளார்.

* * *

ஒரு முஸ்லிம் வாலிபனும், இந்து யுவதியும் ஒரு பூந்தோட்டத்தில், பலர் முன்னிலையில் ஒருவருக் கொருவர் முத்தம் கொடுத்துக் கொண்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டு, இ. பி. கோ. 294-வது செக்ஷன் படி ரூ. 200 அபராதத்தை அந்த வாலிபனுக்கு மாஜிஸ்ட்ரேட் விதித்தார். பெண்ணை எச்சரிக்கையோடு விட்டு விட்டார்.

'குற்றவாளிகளின்' அப்பீலின் பேரில், பம்பாய் ஹைகோர்ட் தண்டனையை ரத்து செய்து விட்டது. தீர்ப்பில் நீதிபதி கஜேந்திர கட்கா கூறுகிறார்:

"ஒரு ஆண் பெண்ணை முத்தமிடுவதை அநாகரிகம் என்று கூற முடியாது. நிச்சயமாக அதை அருவறுக்கத்தக்க காட்சி என்று கூற முடியாது. அப்படி நாம் முடிவு செய்து விட்டால், தந்தை மகளுக்கோ, அல்லது கணவன் மனைவிக்கோ இரயில்வே ஸ்டேஷனில் முத்தமிட்டு வழியனுப்புவது அபாயகரமானதாகி விடும்."

தீர்ப்பைப் பற்றி நம்முடைய அபிப்பிராயம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். நேரு லண்டன் சென்றபோது விஜய லட்சுமியும், அவரது குமாரிகளும் நேருவைப் பலர் முன்னிலையில் முத்தமிட்டுத்தானே வரவேற்றார்கள்! அவர்களுடைய அன்பின் ஆழத்தை விளக்க அந்தப் புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளி வந்தன அல்லவா? நீதிபதியின் தீர்ப்புக்கு அவைகளும் காரணமாயிருக்கும் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

'முரசொலி'
இலங்கை,
உள் நாடு
ஆண்டு சந்தா 6-0-0
6-மாத சந்தா 3-8-0

வட நாட்டான் - வேறு நாட்டான்!

❊ 2-ம் பக்கத் தொடர்ச்சி

மொத்தத்தில் கூட்டிக் கழித்தால் ஆங்கிலேயன் ஆட்சியால் நன்மையும் உண்டு என்பதை எந்த தேச பக்தனும் மறைக்க முடியாது.

இருந்தும் அவனை வெளியேற்றும் போராட்டம் நடந்தது.

இறுதிக் காலத்தில் ஒரே ஒரு மௌண்ட்பாட்டன் மட்டுமே கவர்னர் ஜெனரலாக இருக்கட்டும்; 'இந்தியா' டொமினியன் அந்தஸ்து பெற்றதாக இருக்கட்டும்—என்றபோது கூட பூரண விடுதலை கோரி போராட்டம் நடை பெற்றது.

அப்போது தேசியக் கூடாரத்தில் யாரும் முன் வந்து, 'ஒரே ஒரு மௌன்ட் பாட்டன் இருப்பதால் என்ன வந்து விட்டது? வெள்ளையன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் நமக்கு பளு குறைவு தானே! அவனே இருந்து விட்டுப் போகட்டுமே!" என்று கூறிடவில்லை.

நன்மை செய்திருந்தும்; பலன் பல தந்தும், ஆசானாக; அறிவு போதிப்பவனாக, உற்ற நண்பனாக இருந்தும்கூட ஆங்கிலேயன் விரட்டப்பட்டான்.

ஏன் ?

வெள்ளையன் இந்த மண்ணுக்கு அன்னியன்; எனவே அவனுக்கு 'இந்தியா'வை ஆளும் உரிமை கிடையாது; எனவே வெளியேறு!—கோஷமிடப்பட்டது.

—சுதந்தரக் கோரிக்கையின் அஸ்திவாரமே இந்த கோஷத்தில்தான் அடங்கியிருக்கிறது.

அதையே இப்போது நாமும் திருப்பிச் சொல்கிறோம் :

வடநாட்டான் திராவிடத்து மண்ணுக்கு வேறு நாட்டான்; ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டான்; எனவேதான் விழிப்புற்ற திராவிடர்களால் அவனும் ஆங்கிலேயனைப் போலவே வெளியேற்றப்பட வேண்டியவனாகியிருக்கிறான்!

ஆங்கிலேயன் நம்மையும் வடநாட்டவர்களைப் போலவே அடிமைப்படுத்தி வைத்திருந்தான்; ஆனால் அவன் வெளியேறும்போது அந்த அடிமைச் சாசனத்தை வடநாட்டவன் பேருக்கு "மேடோவர்" செய்து கொடுத்துவிட்டுப் போய்விட்டான். எனவேதான் எழுச்சியுற்ற திராவிட சமுதாயம் அந்த அடிமைச் சீட்டைக்கிழித் தெறிந்து, அக்கினிக்கு இரையாக்க வேண்டுமென்கிறது!

வடநாட்டான் இனத்தால், கலையால், கலாசாரத்தால், வேறு நாட்டான்; அதனால்தான் நமக்கென ஒரு நாடு கேட்டு அவனை வெளியேறச் சொல்கிறோம்!

நாம் பூரண வளர்ச்சி பெற்ற தனித் தேசிய இனம்; அந்த வளர்ச்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்குத்தான் நாம் தனி நாடு கேட்கிறோம்!

இதே கருத்தில்தான் பிரெஞ்சுப் பேராசிரியரான ஆர்பாக் என்பவர் கூறியிருக்கிறார்:

"தன்னுடைய பாதுகாப்பிற்காகவும், உபயோகத்திற்காகவும் ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டால்தான் ஒரு தேசிய இனம் பரிபூரணத் தன்மையை அடைய முடியும்!"

அத்தகைய பரிபூரணத் தன்மையை அடைவதற்காகத்தான் நாம் தனி நாடு கேட்கிறோம்!

அதுமட்டுமல்ல; இட்டாலி நாட்டு எழுச்சிக்கு வித்தூன்றிய விடுதலைச் சிற்பியாம் மாஜினி கூறியபடி, 'ஒவ்வொரு தேசிய இனமும் சுதந்தரமாக இருந்தால்தான் உலக நலனுக்குத் தங்களால் இயன்ற நன்மைகளைச் செய்ய முடியும்.'

மாறாக, ஒவ்வொரு தேசிய இனமும் பிற இனங்களால் அமுக்கப்பட்டிருந்தால் — அதனால் அந்த சம்பந்தப்பட்ட இனத்துக்கும் சரி; பொதுவாக உலகத்திற்கும் சரி; தினைத்துணையும் நன்மை கிடைக்க முடியாது. தனித்து இயங்கினால்தான் அவை தங்களது மொழியையும் கலையையும், கலாச்சாரத்தையும் வளர்த்துக் கொள்ள முடியும். இது மாஜினியின் கருத்துரை!

உதாரணமாக நார்வே, ஸ்வீடன்—சிறிய நாடுகள்: அப்படி அவை சிறியனவாய்; தனித்து இருந்ததால் தான் தங்களது மொழியையும் கலையையும் வளர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

ஹாவர்ட் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் ரேமாண்ட் லெஸ்லி பியூயெல் கூறியிருப்பதைப் படியுங்கள் :

"அமெரிக்காவை விட நார்வேயும் ஸ்வீடனும் தான் உலகத்திற்கு அதிகமான எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் கொடுத்திருக்கின்றன. அதே போலவே 2,775,000 ஜீவன்களையே ஜனத் தொகையாகக் கொண்டிருக்கிற சின்னஞ் சிறிய நாடான டென்மார்க் 100,000,000 ஜனத் தொகை கொண்ட அமெரிக்காவுக்குச் சமமாக; இதுவரை வழங்கப்பட்ட நோபல் பரிசுகளில் ஏழைப் பெற்றிருக்கிறது. அதே போலவே 'குட்டி' நாடான பின்லாந்து 1924-ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் விழாவின் விளையாட்டுப் போட்டிகளில் அமெரிக்காவையே தோற்கடித்து விட்டது."

வெறும் வேடிக்கைக்காக இவைகளையெல்லாம் குறிப்பிடவில்லை அந்தப் பேராசிரியர்!

நார்வேயும் ஸ்வீடனும் மிகப் பெரிய நாடும், மகத்தான வல்லரசுமான அமெரிக்காவைவிட அதிகமான எழுத்தாளர்களை; ஓவியக்கலைஞர்களை உற்பத்தி செய்திருக்கிறது!

இருபத்தேழு லட்சம் ஜனத் தொகை கொண்ட டென்மார்க் அவ்வளவு பெரிய அமெரிக்காவைப் போலவே ஏழு நோபல் பரிசு பரிசுகளைப் பெற்றிருக்கிறது!

1924-ஒலிம்பிக்கிலே நடைபெற்ற விளையாட்டுகளில் அந்த அமெரிக்காவையே பின்லாந்து வாகை சூடி யிருக்கிறது!

எப்படி முடிந்தது அந்தச் சிறிய நாடுகளால்?

அந்தப் பேராசிரியரே காரணம் கூறுவதைக் கேளுங்கள் :

"ஒரு சிறிய நாட்டில் தனிப்பட்ட பிரஜையானவன் தன்னைத்தானே வளர்த்துக் கொள்வதற்கு ஏராளமான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆனால் பெரிய நாடுகளிலோ அப்படி அல்ல. அவைகளோ பெரிய வியாபாரங்களைப் பெருக்குவதிலும், சாம்ராஜ்யப் பிரச்னைகளைக் கவனிப்பதிலுமே தங்கள் கருத்தையும், காலத்தையும் செலவிடுகின்றன!"

—பேராசிரியரின் இந்த வாசகத்தோடு, "தேசிய இனங்கள் தனித்து வாழ்ந்தால்தான் உலக நலனுக்குத் தங்களால் இயன்ற நன்மையைச் செய்ய முடியுமென்ற" மாஜினியின் வாசகத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

அதோடு இந்தியப் பேரரசு 'புகழ் தேடி'யாக மாறி பஞ்சசீலத்தில் காட்டுகின்ற அக்கரையில் அணுவளவேனும் உள்நாட்டு அமைதிக்குக் காட்டாமலிருப்பதையும் இணைத்து நோக்குங்கள்!

நார்வே, ஸ்வீடன் இந்தச் சிறிய தேசிய இனங்கள் அடக்கி வைக்கப் பட்டிருந்தால் இன்று உலகம் மகத்தான எழுத்தாளர்களையும், மாபெரும் ஓவியத் திலகங்களையும் இழந்திருக்கும்!

டென்மார்க்கிலே வசிக்கும் டேனியர்கள் என்ற தேசிய இனத்தவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தால் ஏழு நோபல் பரிசுகளைப் பெறும் வளம் பெற்ற ஒப்பற்ற அறிவு ஜோதிகளைப்பற்றி உலகம் கேள்விப்பட முடியாமலே போயிருக்கும்!

பின்லாந்து மட்டும் அமுக்கப்பட்டிருந்தால் விளையாட்டிலே தேர்ச்சி பெற்ற ஒரு இனத்தவரை ஒலிம்பிக்கிலே சந்திக்கும் பாக்கியம் உலகத்திற்குக் கிடைக்காமல் போயிருக்கும்!

இதே கருத்தினைத்தான் பேராசிரியர் ஆர். என். கில்கிரிஸ்ட் என்பவரும் எடுத்துக் காட்டுகிறார்:

"பெரிய நாடுகளால் சிறிய தேசிய இனங்கள் உறிஞ்சிக் கொள்ளப்பட்டால் ஐரோப்பாவிற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்பதைக் கவனியுங்கள். டென்மார்க். ஹாலந்து, பெல்ஜியம்—போன்றவை ஜெர்மன் ஏகாதிபத்திய வாதிகள் கோரியபடி ஜேர்மன் சாம்ராஜ்யத்தில் இணைக்கப்பட்டு, ஜெர்மானியர்களுடைய வாழ்க்கை முறைக்கும், சிந்தனைக்கும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் மேலை நாகரிகம் பெரிய அளவு நஷ்டத்தைத் தாங்க வேண்டியிருக்கும்.

❊ தொடர்ச்சி 4-ம் பக்கம்

தியாகராயர் கல்லூரி கட்டிட நிதிக்காக

கலை விழா

சென்னை, வண்ணையம்பதி

தியாகராயர் கலாமண்டபத்தில்

நாள்தோறும் மாலை 6-மணிக்கு நடைபெறும்.

6-10-56	சனி	டி. கே. எஸ். சகோதரர்களின்
7-10-56	ஞாயிறு	"இராஜ ராஜ சோழன்"
8-10-56	திங்கள்	,, "எது வாழ்வு?"
9-10-56	செவ்வாய்	என். எஸ். கிருஷ்ணன் குழுவினரின் "தளபதி"
10-10-56	புதன்	சிவாஜி கணேசன் மன்றத்தின் "விதி"
11-10-56	வியாழன்	எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின் "மணி மகுடம்"
12-10-56	வெள்ளி	சாயி. சுப்புலட்சுமி—நடனம்
13-10-56	சனி	எம். ஜி. ராமச்சந்திரன் நாடக மன்றத்தின் "அட்வகேட் அமரன்"
14-10-56	ஞாயிறு	அறிஞர் அண்ணா தலைமையில் 'இன்பக் கனவு'
15-10-56	திங்கள்	சூரிபாபு, இராஜேஸ்வரி குழுவினரின் "தாரா சசாங்கம்" (தெலுங்கு)

சீசன் டிக்கட் :— ரூ. 100, 50, 25, 15.

தினசரி :— ரூ. 5, 3, 2, 1, அணா 8.

அன்பிற்கு முண்டோ, அடைக்கும் தாழ்?

அருமையான மாளிகை; அதில் ஒரு அழகான கூடம்; அங்கே ஒரு பெரியவர்; அந்த வீட்டுக்காரர்.

கூண்டில் அடைபட்ட சிங்கம் என்பார்களே, தெரியுமா? அதைப் போலத்தான் அவர் அலைந்து கொண்டிருந்தார். சிவந்த முகம்—கோபக்கண்கள் ஆத்திர நடை! அப்பப்பா!

அவருக்கு ஏன் இவ்வளவு கோபம்?

அவர் கண்கள் அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தன. மணி ஒன்பது! காலையல்ல; இரவு! மணியைப் பார்க்கப் பார்க்க அவர் கோபம் இன்னும் அதிகமாகியது. ஏன்? பள்ளிக்கூடம் சென்ற அவரது செல்வ மகன் இன்னும் வீடு திரும்பவில்லை. வேடிக்கைதான்; எல்லா அப்பாக்களுக்கும் பயம்தானே தோன்றும்; ஆனால், இவருக்கோ கோபம் உண்டாகி விட்டதே! அத்தகைய முன் கோபக்காரர் அவர்!

சற்றுநேரம் சென்றது. கதவு திறந்தது. உள்ளே நுழைந்தான் ஒருவன். வேறுயாருமல்ல; அவரது மகன்தான்! மகனைக் கண்டதும் அப்பாவின் ஆத்திரம் அதிகமாகியது. "டேய் சோமு! எங்கே போயியிருந்தாய் இத்தனை நேரம்?... ம்...எங்கே போயிருந்தாய்?" என்று எடுத்தவுடனேயே இரைந்தார்.

இதை எதிர் பார்க்கவில்லை சோமு. பயந்தான். நடுங்கினான்.

"சொல்லடா கழுதை!"—அப்பா சீறினார்.

சோமு வாயைத் திறந்தான். நாக்கு பேச மறுத்தது. "இல்லையப்பா.........நம்ம ரங்கனுக்கு உடம்பு சரியில்லை......அவனை ஆஸ்பத்திரிக்கு ... அழைச்சுக் கிட்டு..."—அவன் உளறினான்.

"என்ன? ரங்கனா? அவனுடன் சேராதே சேராதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்?" — அப்பா உண்மையாகவே சிங்கமாகி விட்டார். மறுகணம் ஆத்திரம் அடிகளாகியது. சோமு துடித்தான்.

"இல்லையப்பா! அவனுக்கு ஒரே ஜுரம்பா! சாகக்கிடந்தான்..."

"செத்தால் உனக்கென்னடா? உன் அண்ணனா? தம்பியா?...அந்தத் தோட்டக்காரப் பயலுடன் நீ கொஞ்சுவது பிடிக்கவில்லை என்று தானே அவனை வேலையைவிட்டு விரட்டினேன்!..."

சோமுவின் கண்களின் நீர் பெருகியது. தலை குனிந்தபடி நின்றான். "போடா உள்ளே!" என்று அப்பா இரைந்தார். சோமு தன் அறைக்குள்ளே சென்றான்.

அவனுக்கு அழுகை வந்தது. அறை ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். கொஞ்ச தூரத்தில் ஒரு ஓட்டைக் குடிசை தெரிந்தது. 'ஐயோ!... அந்த ஓட்டைக் குடிசையில் தானே ரங்கன் முனகிக் கொண்டு கிடப்பான்! பாவம்! டாக்டரும் மருந்து வாங்க பணம் கேட்கிறாரே! என்னிடமும் தம்பிடிகூட இல்லையே! நான் என்ன செய்வேன்? அப்பாவும் அடிக்கிறார். அனாதைக்கு இரங்கவும் மாட்டார்! ரங்கன் சாகவேண்டியதுதானா? ஐயோ!'—இப்படி எண்ணினான். அந்த ஏழைத் தோட்டக்காரனுக்காக— தாய் தந்தையற்ற அனாதைச் சிறுவனுக்காக—அந்த சீமான் மகன் துடித்தான்!

⁂

நள்ளிரவு. ஒரு மணி இருக்கும். ஒரே இருட்டு.

சோமுவின் மாளிகைக் கதவு மெதுவாகத் திறந்தது. வெளியே வந்தது ஓர் உருவம். அதுவேறு யாருமல்ல; சோமுதான்! வெளியே வந்த அவன் வேகமாக நடக்க ஆரம்பித்தான். ஆனால் அவன் உணரவில்லை, அவனைத் தொடர்ந்து மற்றொரு உருவம் பின்னாலேயே வீட்டிலிருந்து வருவதை!

சோமு நேராக ஓட்டைக்குடிசைக்குச் சென்றான். உள்ளேயும் நுழைந்தான். அங்கே... ஒரு கிழிந்த பாய்; அதன் மேல் ஒரு எலும்பும் தோலுமான உடல்—அவன்தான் ரங்கனா?

"ரங்கா" என்றான் சோமு. அந்தக் குரலிலே ஒரே துடிதுடிப்பு, பாசம்!

ரங்கன் முனகினான். "யார் சோமுவா?...ஐயையோ! இந்த நேரத்தில் நீ ஏன் வந்தாய்? உன் அப்பா கோபிப்பாரே!" என்றான். அந்தக் குரலில் ஒரே ஏக்கம்; நடுக்கம்!

"கோபிப்பதோடு மட்டுமல்ல ரங்கா! அடிக்கவும் செய்தார்! உனக்கு மருந்து வாங்கப் பணம் கேட்கலாம் என்றிருந்தேன் ... ஆனல்..."—சோமு பேச்சை முடிக்கவில்லை; விம்மினான்.

"எனக்காக உனக்கேன் தொல்லை சோமு!...நீ போய் விடு."

"இல்லை ரங்கா! உன்னிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். நாளைக்கு எப்படியும் மருந்து வாங்கி..."

"வேண்டாம் சோமு! உன் அப்பா காலணாகூட தரமாட்டார் என்று எனக்குத் தெரியும்..."

"அப்பா தரா விட்டால் என்ன? என்னிடம் இதோ, மோதிரம் இருக்கிறது; கடிகாரம் இருக்கிறது! ஒரு உயிரைக் காப்பாற்ற உபயோகப் படாமல் வேறு எதற்கு இவை எல்லாம்?...காணாமற் போய் விட்டது என்று சொல்லி, என் ரங்கனின் உயிரைக் காப்பேன்"

ரங்கன் இதற்கு சரியான பதில் சொல்லவில்லை. ஏதேதோமுனகினான்; உளறினான்; ஜுர வேகத்தில் பிதற்றவும் ஆரம்பித்து விட்டான்.

"ரங்கா...ரங்கா!..."–சோமு உரக்கக்கத்தினான். சற்று நேரத்திற்கெல்லாம் அந்தக் குடிசைக்குள்ளிருந்து விம்மி அழும் குரல் கேட்டது. அந்தக் குரல் சோமுவைப் பின் தொடர்ந்து வந்து வெளியே நின்றபடி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த அந்தக்கரிய உருவத்தின் காதுகளிலும் விழுந்தது.

மறுகணம் சோமு குடிசையை விட்டு வெளியே வந்தான்.

பொழுது விடிந்ததும், இரவு முழுவதும் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த சோமு எழுந்தான். அப்பாவைப் பார்த்தான்; காணவில்லை. குடிசையை நோக்கி வேகமாக நடந்தான்.

குடிசையை நெருங்கினான்... ஆனால்...திடுக்கிட்டான்; சடக்கென்று நின்று விட்டான்.

ஏன்? குடிசையின் வாசலில் நின்று கொண்டிருந்த ஒரு மோட்டார் கார்தான் அவனை திகைக்க வைத்தது. அந்தக் காரும் அவனுடைய அப்பாவின் கார்! சோமு திகைக்காமல் என்ன செய்வான்? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஓடினான். குடிசைக்குள் நுழைந்தான். அங்கே? ...அவனது அப்பா! அவர்களின் குடும்ப டாக்டர்! ரங்கனை பரிசோதித்துவிட்டு எழுந்தார் டாக்டர். மருந்தும் கொடுத்தார்.

சோமு அப்பாவைப் பார்த்தான். அப்பா சோமுவைப் பார்த்தார்.

"சோமு! நீ கடிகாரத்தையும் விற்கவேண்டாம்; மோதிரத்தையும் விலை கூற வேண்டாம்! உன் கண்ணீர்—நேற்று இந்தக் குடிசையில் எழும்பிய உன் அழுகுரல் இவை எனக்கு பாடம் கற்றுத் தந்துவிட்டன. ...இனி ரங்கன் உன் ரங்கனல்ல; நம் ரங்கன்!" என்றார் அவர்.

சோமுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ரங்கனுக்குப் பக்கத்திலே பரிவுடன் ஓடிய அவர், அவனது அப்பாதான் என்பதைப் புரிந்துகொள்ள அவனுக்கு சிறிது நேரம் பிடித்தது.

●

நடுநிசி! பனி உறைந்துபோன பாறைகளுக்கு மத்தியிலேயிருந்த அந்த வீடு நிலவொளியில் பளிச்சென்று தெரிந்தது. இருள் சூழ்ந்து கிடந்த அந்த வீட்டினுள்ளே. திடீரென்று விளக்கொளி தெரிந்தது. அதைத் தொடர்ந்து பெருங் கூச்சல் எழும்பியது.

"ஐயோ! மகனே! மகனே! எங்கேயடா போனாய்?" என்று அலறினாள் ஒரு தாய்! அதைப் போலவே வீட்டிலிருந்தோர் அத்தனை பேரும் அலறினார்கள். அந்தக் கதறலுக்குக் காரணமாக, அந்த வீட்டு ஒன்பது வயது செல்லப் பிள்ளையின் படுக்கை காலியாகக் கிடந்தது!

நடுஇரவு—பக்கத்திலோ வன மிருகங்கள் உலவும் அடர்ந்த புதர்கள் அடங்கிய பெருங்காடு—பெரியவர்களே வெளியே தலைகாட்ட அஞ்சும் பயங்கர நேரம்—அந்த நேரத்திலே ஒன்பது மணிக்குப் படுக்கையிலே படுத்தவனை பனிரெண்டு மணிக்குள் காணவில்லை யென்றால்...?

தண்ணீர்— விளையாட்டு தந்த வீரன்!

வீடு அல்லோல கல்லோலப் பட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஊர் முழுதும் 'சல்லடை' போட்டு சலித்து விட்டார்கள். பலனேயில்லை. அவன் எங்குதான் மறைந்தான்?

எல்லோரும், வேறு தேடுவதற்கு இடமில்லாமல் போகவே, பயந்தபடியே பக்கத்துக் காட்டுக்குள் நுழைந்தார்கள். மிருகங்கள் வருமோ — பாய்ந்து கொல்லுமோ — என்ற நடுக்கத்துடன் சென்ற அவர்கள், அங்கே ஒரு அதிசயத்தைக் கண்டார்கள். அங்கே...அடர்ந்த புதர்களுக்குப் பக்கத்திலே இருந்த ஒரு ஓடையின் கரையில் அவர்கள் தேடிவந்த சிறுவன் அமர்ந்திருந்தான். அவனது கண்கள் ஓடையிலே குத்திட்டு நின்றன. தாயும் மற்றோரும் ஓடினார்கள். ஆனால் அம்மாவைக் கண்ட அன்பு மகனோ, "அம்மா! அதோ பாருங்கள், அம்மா! நீரிலே எம்பி எம்பிக் குதிக்கும் அந்த மீன், நிலவொளியில் வெள்ளி மீன் போல இல்லையா? நான் தினம் தினம் இரவிலே இதை வந்து பார்க்கிறேனம்மா!" என்றான் முகம் நிறைந்த களிப்புடன்!

இதுவும் ஒரு விளையாட்டா—என்று கேட்கிறீர்களா? தண்ணீரிலே ஆரம்பித்த அந்த விளையாட்டுதான், இங்கிலாந்து நாட்டுக்கு ஒரு ஒப்பற்ற கடற்படை வீரனை—நெல்சனைத் தந்து பெருமை அடைந்து விட்டது; நினைவிருக்கட்டும்!

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி.

எவ்வளவு தேசிய இனங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு ஜனநாயக நாடுகளாகப் பிளவு பட்டே தீரும்!"

— இதன் அடிப்படையில் இன்றில்லாவிட்டால் நாளை; நாளையில்லையேல் நாளை மறுநாள் திராவிட தேசிய இனத்துக்கு ஒரு தனி நாடு கிடைத்தே தீரவேண்டும்.

—மாறன், எம். ஏ.

[சென்னை பத்திரிகை யொன்று நடத்திய 'திராவிடஸ்தான் வேண்டுமா: வேண்டாமா?' — என்ற போட்டியில், இதுவரை 'வேண்டா'மென்று எழுதிய பரிசுக் கட்டுரைகளுக்குப் பதில்தரப்பட்டது. இந்த இதழில், போட்டியின் வேண்டாமென்ற பகுதிக்குப் பஞ்சாயத்தாராயிருந்த ஒருவர் எழுதிய கட்டுரைக்கான பதிலின் இரண்டாவது பகுதி தரப்பட்டிருக்கிறது.]

மு. அ; சூளை.

(?) கல்லைப் பெண்ணாக்கிய இராமனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அந்த இராமன் ஒரு சிற்பியாக இருந்திருந்தால் சல்லைக் கனிவு மிக்க பெண்ணாக்கிய அவனது திறமையைப் பாராட்டியிருப்போம்; ஆனால் சனாதனிகள் அவனை ஆண்டவன் அவதாரம் என்றல்லவா கூறுகிறார்கள்!

கலியமூர்த்தி; தாராபுரம்.

(?) துரோகி என்பவன் எப்படியிருப்பான்?

வீபீஷணனைப் போல உடன் பிறந்த சகோதரனாகவும் இருப்பான்; பிரகலாதனைப் போல பெற்ற மகனாகக்கூட இருப்பான்!

செல்வராஜ்; கோவில் பட்டி.

(?) பண்டித நேரு ஏன் சவூதி அரேபியாவிற்குச் சென்றிருக்கிறார்?

பின்னர் என்ன; தமிழர் பிரச்னையைத் தீர்க்க இலங்கைக்கா செல்வார்? பாவம்; சாம்ராஜ்யாதிபதிகள் வெளிநாடு செல்ல ஒரு காரணமா வேண்டும்?

கதிரேசன்; புதுவை

(?) நாசர் இந்தியாவின் பிரதமராக இருந்தால் இங்கே எதை முதலில் தேச உடமையாக்குவார்?

கோவில்களை; மடாலயங்களை அதில் குவிந்து கிடக்கும் கோடிக்கணக்கான ரூபாய்களை!

ஆர். கே. பாலு; அவிசாவேளா.

(?) சென்னையில் காந்திக்கு நினைவு மண்டபம் எங்கிருக்கிறது?

அந்த ஏழைகள் நண்பனுக்கு நிறுவப்பட்ட நினைவு மண்டபம் ஆண்டொன்றுக்கு பத்து லட்சம் ரூபாய் பெறும் ஏழை ராஜ்யத்தின் கவர்னர்பிரானுடைய மாளிகைக்குப் பக்கத்தில் இருக்கிறது!

எல். பலராமன்; சாயல்.

(?) கோழையும் வீரனும் சந்திக்கும் இடம் எது?

கோழை வீரனைச் சந்திக்க மாட்டான்; அவனது முதுகைத்தான் சந்திப்பான்!

வி. கில்பர்ட்; நாகர்கோவில்.

(?) இட்சியம் என்றால் என்ன?

மரண பயத்தைக்கூட துச்சமாக மதித்துவிடச் செய்யும் ஒரு மகத்தான சக்தி!

வேந்தன்; பீளமேடு.

(?) உலைவாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாதாமே: ஏன்?

'ஊர் வாய்' என்பது பண்டிதருடைய வாயைப் போல பொல்லாதது; அதனால்தான்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. முரசொலி அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.